1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 34-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆவணி மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## தமிழுலகம் அண்மையில் இழந்த தனிப்பெரும் மும்மணிகள்

கடந்த சிலவாண்டுகள் தமிழன்னைக்குத் துர் அதிஷ்டமான காலமாகும். தமிழ்த்தாயின் புனிதமான சேவடிகளுக்குச் சேவை செய்துவந்த அடியார்கள், அந்தணர்கள், புலவர்கள் இந்தப் பொல்லாதகாலத்தில், காலவெள்ளத்தினுல் அடிக்கப்பட்டு மறைந்துவிட்டார்கள்.

தமிழ்மக்களுக்கோ இந்தக் கொடூரமான ஆண்டுகள் தேடிவைத்துள்ள நட்டங்களைச் சிந்தித்துப் பார்ப்பதுகூடக் கடினமாகத்தானிருக்கும். பன்மொழி அறிஞரும், தமிழ்மொழியே உலகம்உண்டானபோது தோன்றியமொழிஎன்று வாதித்தவருமான நல்லூர் சுவாமி.ஞானப்பிரகாசர் போய்விட்டார். அவரைத்தொடர்ந்து பேராசிரியர் விபுலானந்தஅடிகள் யாழ்நூலை எம்மிடந்தந்துவிட்டு விரைந்துவிட்டார். "இனிஇந்தநாட்டில் நமக்கென்னவேலை" என்று சொல்வதுபோலச் செந்தமிழ் அறிஞர் மறைமலையடிகளும் கண்ணைமூடிக்கொண்டார்.

ஐயோ, தமிழ் அன்னையே! உனதுபொன்னடிகளுக்கு உள்ளன்போடு சேவைசெய்த பல புதல்வர்களை நீஇழந்துவிட்டாய். உன்அருந்தவப் புதல்வர்களில் நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர், சுவாமி விபுலானந்தர், மறைமலைஅடிகளாகிய மூன்று அடிகளும் மூன்றுமணிகள்என்றால் இது புனைந்துரையாகாது.

**சுவாமி. ஞானப்பிரகாசர்**

"தமிழே உலகத் தாய்மொழி என்று பறையடித்தோதிய பன்மொழிப்பண்டிதன்" என்று சுவாமி சுததானந்தர் அவர்கள் சுவாமி. ஞானப்பிரகாசரைப் பற்றி எழுதியிருப்பது மிகவும் பாராட்டப்படத்தக்கது. தமிழ்மொழி ஆராய்ச்சிக்கும்—சரித்திரவரலாறுகளுக்கும்—கத்தோலிக்கசமயத்துக்கும் செயற்கரும் பணிபுரிந்த சுவாமி. ஞானப்பிரகாசர்அவர்களின் பிரிவானது தமிழ்நாடு 1947-ம்ஆண்டு தை மாதம் 22-ந்திகதிகேட்ட ஓர் அதிர்வெடியாகும்.

நல்லூர் சுவாமிஎன்ற அடைமொழியோடு கூறப்படும் ஞானப்பிரகாச சுவாமிகள் மானிப்பாயில் 1875-ம் ஆண்டு ஆவணிமாதம் 30-ந்திகதி பிறந்தார். அவருடையதந்தையார் ஓர்ஆசிரியர். தாயார் அவ்வூரில் கல்விகேள்விகளில் பரம்பரையாய்ச் சிறந்திருந்த காடினர் சிற்றம்பலத்தின் மூத்தமகளாவர். பாலியப்பிராயத்திலேயே சுவாமிகளின்தந்தையார் இவ்வுலகவாழ்வை நீத்தமையால், தாயார் அச்சுவேலியில்ஸ்ரீமான் தம்பிமுத்துஅவர்களை மணஞ்செய்துகொண்டு அங்கேயே நிம்மதியாகக் காலங்கழிக்கலாயினர். ஸ்ரீமான் தம்பிமுத்து அவர்கள் அக்காலத்தில் சிறந்த கல்விமானுகவும், ஓர்எழுத்தாளனுகவும், கவிகள் யாக்கவல்ல புலவராகவும் விளங்கினுர். அவருடைய சேர்க்கையினுல் இளம்

வித்துவான்
என். எம். ஜே. வேதநாயகம்

பருவத்திலேயே ஞானப்பிரகாசர் தமிழின்சுவையைப் பருகுதல் இலகுவாயிற்று. தகுந்தவர்களிடம் சங்கதமும், தமிழும் பாடங்கேட்டுக்கொண்டு ஞானப்பிரகாசர் இளம்பிறையென வளர்ந்து சம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்றபின்னர் சில காலம்அரசாங்கத்தில் பதவியேற்றிருந்தார். பின்னர் துறவறம்பூண்டு 1901-ம ஆண்டு ஒரு குருவாக அபிஷேகம்பெற்றூர்.

சுவாமியவர்கள் தமிழில்எழுதியுள்ள நூல்கள் விதம்விதமாகவும், ஏராளமாகவும், நவமான ரீதியிலும் அமைந்திருப்பதால் இத்தீவில் எந்தஎழுத்தாளனும் சுவாமியாரளவு தேர்ச்சி அடைவானேஎன்பது சந்தேகந்தான். வனப்புவாய்ந்த அவருடைய வசனநடையில் கடைந்தெடுத்த வைரங்கள்போல ஒவ்வொரு சொல்லும் மினுமினுக்கும். அவருடைய அற்புதமான வசனநடையை வாசிக்கிறவர்கள் எவ்வளவுசரளமாக — தண்ணீர் போல—சொற்கள் போகின்றனஎன்பதை அவதானிக்க முடியும். அவரிடத்தில் சொற்பஞ்சம் என்பது காணக்கிடையாது. வாசிக்கிறவர்களுக்குத் தகுந்தவாறு தமதுவசனநடையைக் கையாள்வதில் சுவாமியார் மிகுவல்லவர்.

(தொடரும்)

## "யேசுவின் நேசத்துக்காக அவனை மன்னிக்கிறேன்"

"மரியா! என்ன சம்பவித்தது? யார்? எதற்காக?

"அலெக்ஸான்ட்ரோ, அவன் செய்த வேலையைப்பாருங்கள்"

"என்ன காரணத்திற்காக?"

"அவன்என்னைத் தவறுசெய்ய இழுத்தான். நான் இணங்கவில்லை."

இந்தச்சம்பாஷணை மரியகொறெற்றிக்கும்அவள்தாயான அசுந்தாவிற்குமிடையே நடந்தது. மேலும்வினவ மனமில்லை. இடமில்லை. உயிரேநீங்குவதுபோல் பெருமூச்செறிந்து மயங்கி விழுந்தஅவளை வெளியேதூக்கிச்சென்றனர்.சிறிதுநேரத்தில் வைத்தியர்வந்தார். காயங்களைக் கட்டினர். மரியாஅழுவேயில்லை. முறைப்பாடென்பதில்லை. இடையிடையே அவள்பேசினுள். "அலெக்ஸான்ட்ரோ, நீஎவ்வளவோ பயங்கரமான நிலையிலிருக்கிருய்........நீ நரகத்துக்குப் போவாய்." அதன்பின் அவள் கண்களில் வேதனை நிரம்பியது. கதவுப்பக்கம் பார்த்துக்கொண்டே "தயவுசெய்துஅலெக்ஸான்ட்ரோவை உள்ளேவிடாதீர்கள்" என்று கெஞ்சினுள். ஆனுல், அவன் அப்பக்கமே காணப்படவில்லை. அவனது அறை பூட்டியிருந்தது. முகங்குப்புறப் படுத்து, எதற்கோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அதற்கிடையிலே பொலிஸ் அதிகாரிகள் 'எங்கே? எங்கே?' என்று அவசர அவசரமாய்க் கேட்டுக்கொண்டே குதிரைகளில்வந்தனர். அலெஸ் தனது படுக்கையைவிட்டு அசையவே இல்லை.. கீழே பொலிசரின் இரைச்சல் அவன்செவியைத் துளைத்தது. "எங்கே? எங்கே? அந்தக்கொலைஞன்?" அவர்களைப் பின்தொடர்ந்த சனக்கும்பலோ மாடிக்கு ஏறியது. அடிச்சுவடுகள் அலெஸ்காதில் படவில்லையா? இதோ! அவனது அறைக்கதவே இடிபடுகிறது. அவன் சுவர்ப்புறமாகச் சாய்ந்து படுத்துக்கொண்டான். நித்திரைசெய்வதாகப் பாவனை. உள்ளேபூட்டியதை யாரால் திறக்கமுடியும்?

நீத்தாஎன்றபெண் தன்திடசரீரத்தால ஓர்உதைகொடுக்கவே கதவுஅதிர்ந்து திறந்தது. அவன் அசையவேயில்லை. "படுதுரோகி, தூங்குகிருன். அவனை எழுப்புவோம்"என்றது சனக்கும்பல். நீத்தா அவன்மீது பாய்ந்தாள். ஆனுல் பொலிசர் அவளைத் தடுத்தனர். சனக்கும்பலைக் கலைத்தனர். அவனை உற்றுநோக்கினர். அசைவதாயில்லை. பொலிசரில் ஒருவன் அவனைஉருட்டினுன். மற்றவன் அவன்கைகளில் விலங்குபூட்டினுன். அலெஸ்கண்களைஉருட்டி ஒவ்வொருவனுயும் பார்த்தான். பொலிசர் அவனை வழிநடத்தினர். அவனுக்கு ஆபத்துநேரிடாவண்ணம் செல்வது பெருங்கஷ்டமாய்இருந்ததால் நேற்றானேவிலிருந்து வேறுபொலிசரும் வரவேண்டியிருந்தது.

மரியாவை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியில்தான் அலெக்ஸான்ட்ரோவைக் கூட்டிச்சென்றனர். 'வெட்கம்'என்றது சனக்கும்பல் ஆக்ரோஷத்தோடு. மரியா கண்களை மூடிக்கொண்டாள். வாய்அசைந்தது. ஆனுல், குரல்இல்லை. அசுந்தாவின் உள்ளத்தினின்றும் ஏக்க ஒலிவந்தது. மயக்கமாஞள்.

கல்லெறி, சாபம் இவற்றிடையே அலெஸ் நடந்துசென்ருன். "அவனை எங்களிடம் விட்டுவிடுங்கள், நாங்கள் பார்த்துக்கொள்ளுவோம், அவன் சாகவேண்டும்"என்றது சனக்கும்பல். பொலிசர் வெகுபாடுபட்டு அவர்களைக்கலைத்தனர். இரவு நடுநிசி. அலெஸ்முகம் மாறவேயில்லை. கேள்விகள்தொடுத்துக் கேட்கப்பட்டும் பயனென்ன? அவன் மௌனம்சாதித்தான். உத்தியோகஸ்தர் வருவதும் போவதுமாயிருக்க, அலெஸ் ஓர் பலகைமீதுஉட்கார்ந்து மௌனமாய்த் தன்எதிரேயிருந்த சுவரைவெறிக்கப்பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது லெயோனர்டோ ருகெரிஎன்பவர், தான்தனியே அலெஸிடம் பேசவிரும்புவதாகக்கூறி உட்பிரவேசித்தார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

**மற்றோர் இந்தியமேற்றிராணியார்**

இந்தியாவிலே நாகப்பூரின் புதியமேற்றிராணியாராக மகா வண. ஈயூஜென்டெசூசா சுவாமியவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் 1917-ம் ஆண்டு நாகப்பூரில் பிறந்தவர். இவரது சகோதரர்களில்இருவர் இந்தியஇராணுவத்தில் உயர்ந்த பதவிகள் வகித்திருக்கின்றனர். மற்றோர் சகோதரர் பொலிஸ் பகுதியிலே உயர்ந்தபதவியில் இருக்கின்றார். இன்னொரு சகோதரர் வண. ஜாய்க் டெ சூசாசுவாமியார் நாகப்பூரில் தொண்டாற்றி வருகின்றார்.

**மாணவரின் பிரலாபக்கண்ணீர்**

சீனதேச ஷாங்காய்நகரிலே 1903-ம்ஆண்டு யேசுசபைக் குருமார்அடியிட்டுப் பரிபாலித்து நடத்திவந்த ஆரோரா (அருணோதய) சர்வகலாசாலையைவிட்டு ஆடிமாதம் 15-ந்திகதிக்குமுன் அவர்கள் வெளியேறிவிட வேண்டுமென்று கம்யூனிஸ்த அரசாங்கம் ஓர்கட்டளை பிறப்பித்தது. அதனால் அவர்கள் முதனாள் 14-ந்திகதி அதைவிட்டு வெளியேறுமுன் வண. லூயிஸ் லூமாஸ் சுவாமியவர்கள் அச்சர்வகலாசாலையின் வெளிமைதானத்தில் கடைசியாக நிறைவேற்றிய திவ்வியபூசைக்குப் பெருஞ்சனத்திரள் சமுகமளித்திருந்தது. பூசைமுடிவில் சுவாமியவர்கள் சிலவார்த்தைகள் பேசித் தமது கடைசிஆசீர்வாதம் வழங்கியபோது மாணவர்களெல்லாம் அழுதுபிரலாபித்துக் கண்ணீர் உகுத்துநின்றார்கள்.

**சிறியபுஷ்பத்தின் சகோதரி**

அர்ச். சின்னத்தெரேசம்மாளின் மூத்தசகோதரியும், 58 வருடகாலம் லிசியேபதிக் கார்மேல்மடத்தின் தலைவியுமாக விளங்கியிருந்து சமீபத்திலே தனது 90-ம்வயதில் காலஞ்சென்ற சங். அக்னேஸ் தாயாரின் மேனியானது, அர்ச். தெரேசம்மாளின் திருவுடலை அடக்கிய கார்மேல் சிற்றாலயத்தின் நிலவறையிலே அதற்குச் சமீபமாக அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிறது. அவளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ரீமூயின் நாமமாத்திரையான பீற்றர் பலேயிஸ் மேற்றிராணியாரால் நிறைவேறிய துக்கப்பாடற்பூசையின்பின் அந்தமடத்துக் கன்னிகாஸ்திரீமாருக்கும், விசேஷமாய் அர்ச். தெரேசம்மாளின் சகோதரிகளில் இன்னமும் உயிரோடிருக்கும் சங். ஜெனெவியெவ் கன்னிகாஸ்திரீக்கும் பரிசுத்தபிதா அனுப்பிய அனுதாபதந்திச்செய்தி வாசித்துக் காட்டப்பட்டது.

**பத்திநாதரின் வாழ்க்கைப்படம்**

மூத். பத்தாம்பத்திநாத பாப்பானவர் பரமபதமடைந்த 37-வதுவருட நிறைவுதினமாகிய நிகழும் ஆவணிமாதம் 20-ந்திகதியன்று அவரது சீவியவரலாற்றைச்சினிமாப்படம் பிடிக்கும் வேலை ஆரம்பமாகியிருக்கிறது. இதற்கென ஆர்பர் பிலிம் கம்பெனியென ஒன்று ஆக்கப்பட்டிருக்கிறது. அநேகவருடகாலம் பத்தாம்பத்திநாதரை நன்கறிந்தவரான ஜியுசெப்பி தேமோறி என்பவரால் இதற்கென எழுதப்பெற்ற அவரின் சரித்திர வரலாற்றை வத்திக்கான் அங்கிகரித்திருக்கிறது. இன்னும் அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டுவிக்கும் விஷயமாய் அவர் சலிகையால் அனுக்கிரகம் பெற்றுக்கொண்ட எவராவது அதுபற்றியவிபரங்களை அத்திருப்பட்டவிசாரணையின் தலைவராய் றோமாபுரியில் இருந்து வருகின்ற வண. அல்பேட்ரோ பறென்ரி சுவாமிகளுக்கு அனுப்பிவைக்கும்படிகேட்கப்பட்டிருக்கின்றனர்.

**பாத்திமாவின் திருச்சடங்குகள்**

பரிசுத்தவருடத்தின் அதிகாரபூர்வமான முடிவுசம்பந்தமாகப் பாத்திமாபதியிலே வருகிறஐப்பசிமாதம் 13-ந்திகதி நிகழவிருக்கின்ற திருச்சடங்குகளில் தம்முடையபிரதிநிதியாகத் தலைமைவகிக்குமாறு தமது விக்கார் ஜெனறலாகிய கருதினல் மிக்காரூ ஆண்டவரைப் பரிசுத்த பாப்பரசர் நியமனஞ்செய்திருக்கின்றார். இத்திருச்சடங்குகளுக்குமுன் "பாத்திமாவின்செய்தி" என்பதை விஷயமாகக்கொண்டு அப்பதியில் அநேகதினங்களாக ஓர் மகாநாடு நடந்தேறும். பாத்திமாவின் மூன்றுபிள்ளைகளுக்கும் பரிசுத்ததேவதாயார் கடைசிமுறையாகக் காட்சியருளிய 34-வதுவருட நிறைவுதினமே இத்திருச்சடங்குகள் நடைபெறுந்தினமுமாகும். இவைகள் நடைபெற்றபோதிலும் பரிசுத்த வருடப்பலன்களை வருகிறமார்கழி 31-ந்திகதி முடிவுவரையிலே பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்தானிகர் யாதுகூறுகின்றர் ?**

"கத்தோலிக்க திருச்சபையின் ஆத்மீகபலமானது இன்று உலகிலுள்ள எந்தஇராணுவ பலத்திலும்எவ்வளவோ அதிகம் மேம்பட்டுவிளங்குகின்றது" என்று ஸ்பெயினிலே அமெரிக்கஐக்கிய தேச ஸ்தானிகராக இருந்து வருகின்ற திரு. ஸ்ரான்ரன் கிறிவிஸ்அவர்கள் அமெரிக்கவர்த்தகசங்கவருடாந்தகூட்டத்துக்குச் சமுகமளித்தபோது கூறலாயினர். இவர் ஓர் கத்தோலிக்கர் அல்லாதபோதிலும்கம்யூனிஸத்தை எதிர்த்துநடத்தும் உக்கிர போராட்டத்திலேகத்தோலிக்க திருச்சபையின் முக்கியத்துவத்தின்மட்டில் தமக்குண்டான அபிமானத்தைப் பிரசித்தமாக அவ்வேளை தெரிவிக்கலாயினர்.

**லிதுவானியாவும் குருமாரும்**

தற்போது சோவியற்ஆட்சியிலே இருந்துவருகின்ற பால்த்திக்நாடுகளில் ஒன்றாகிய லிதுவானியாவுக்கென்று வருகால குருமாரைப் புதிதாகக் கண்டடையும், இயக்கம்ஒன்று நியூயோர்க்நகரில் ஆரம்பமாகியிருக்கிறது. யுத்தத்துக்குமுன் அந்நாடு சுமார் 2,200 குருமார்வரையிலே கொண்டிருந்தது. ஆனால், இத்தொகை [illegible] யாலே இருநூறுகக்குறைந்து போய்விட்டது. அமெரிக்கஐக்கியதேசத்திலே லிதுவானிய அகதிகளாய் இருந்துவருகிறவர்கள்மத்தியில் 200 வாலிபர்களைக் கண்டடைந்து, நிலைமைகள் இடந்தரும்போது தங்கள் சுவநாடுசென்று தொண்டாற்றும்படியாக இவர்களைக் குருமாராகப்பயிற்றியெடுக்கமுயற்சி நடக்கின்றது. இவர்கள் அமெரிக்க ஐக்கியதேசத்திலே தங்கள் குருத்துவகல்வியைத் தொடக்கிப் பின்னர் றோமாபுரியிலே இற்றைக்குமூன்றுவருடங்களின் முன் அமைக்கப்பெற்ற லிதுவானிய குருமடத்தில் தொடர்ந்து அதனை முடிப்பார்கள்.

**குற்றஞ்சொல்ல இடமில்லை**

சீனவிலே 25 வருடகாலம் நோயாளரைப் பராமரித்தும், பிள்ளைகளுக்குப் பலவிதசகாயங்கள்செய்தும், அனதர்களைப் பாதுகாத்துவந்த அர்ச். கலம்பானின் சபைக் கன்னிகாஸ்திரீமார் கம்யூனிஸ்தர்களின் பலவந்தகாரணமாக அத்தேசத்தைவிட்டு வெளியேறியிருக்கின்றனர். இதுவிஷயமாய் அவர்கள் தெரிவிப்பதாவது: "வறிய சீனமக்களில் நாம் குற்றஞ் சொல்வதில்லை. கிறீஸ்துசமயத்தின் மதிப்பைக்குறைத்து, அதனை அழித்தொழித்துவிடுமாறு சகலவிதமான பிரயத்தனமும் செய்யப்பட்டுவரும் தற்போதையநிலைமையிலே அவர்கள் பலமற்றிருக்கிறார்கள். இன்னும் சீனவின்சரித்திரத்திலே இஃது முன்னர்நிகழ்ந்திராத ஓர் அபூர்வசம்பவம் அன்று. அப்பெரியதேசத்திலே கிறீஸ்துவேத சரித்திரம்முழுவதிலும் உக்கிரவேதகலாபனையும், அதனைத்தொடர்ந்து அமைதியும், சமாதானமும் மறுமலர்ச்சியுமாகவே இருந்து வருகின்றன."

**பிறிமேசனின் சேபமாலைகள்**

பிரபல அமெரிக்க நடிகரான றெட்ஸ்கெல்ரன் என்பவர் தற்போது லண்டனிலே நடித்துவருகின்றார். இவரது கோஷ்டியிலே வண. எட்வாட் கார்ணி எனும் குருவானவர் உட்படப் பத்துப்பேர் இருக்கின்றனர். இவர் ஓர்பிறிமேசனாக இருந்தபோதிலும் சமீபத்திலே தமது கோஷ்டியினருடன் வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்த பிதாவின்பேட்டிபெறலாயினர். அப்போது இவர் தனது நண்பர்களுக்கென்று ஆசீர்வதிப்பிக்குமாறு 250 செபமாலைகளைத தன்னுடன் கொண்டு சென்றார். இவரது கோஷ்டியிலே பேரான அமெரிக்க நூலாசிரியரும், சென்றவருடம் மனந்திரும்பிக்கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்தவருமான திரு. ஜெனே பவுலாஅவர்களும் இருக்கின்றார்.

**நம்பிக்கைக்குரிய அறிகுறி**

"நமது பிரிந்துபோன சகோதரர்களான புரொட்டஸ்தாந்த கிறீஸ்தவர்கள்மத்தியிலே தேவமாதாவின்பத்தி வளர்ந்திருக்கிறது, வளர்ந்துகொண்டுவருகிறதுஎன்பதை நாம் அறிவது பரிவோடும், கனிசத்தோடும் கூடியதாகும்; இதனை நாம் மகா [illegible] ஓர் அறிகுறியாகவே கொள்ளுகிறோம்; தேவ வார்த்தையானவரைக் கர்ப்பந்தரித்துப் பெற்றெடுக்கத் தேவதாயார் சகலசிருஷ்டிகளுக்கும் மேலாகத் தெரிந்தெடுக்கப் பெற்றதை ஆர்ப்பரித்துக் கூறுவதாலே சருவேசுரனுக்கு என்னபெரும் மகிமையும், தோத்திரமும் தாங்கள் உண்டுபண்ணுகிறார்கள் என்பதை அவர்களுள் இன்னும் அதிகமானோர் கண்டறியும்படியாக நாம் மன்றாடுகிறோம்" என்று இங்கிலாந்திலே சவுத்வார்க்நகர் மேற்றிராணியாரான கவ் டெரோய் ஆண்டவர் விடுத்துள்ள மேய்ப்பர் நிருபம்ஒன்றில் தெரிவிக்கின்றார்.

## மரணஞாபக அறிக்கை

கன்னியும் வேதசாட்சியுமாகத் தனது பதின்மூன்றாம் வயசுமுடிந்த ஓர்ஆவணிமாதத்தில் மாணித்த அற்புதவரத்தி அர்ச். பிலோமினம்மாளின் விசேஷசலுகையினல் அருளப்பெற்றுத் தனதுபேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவளின் ஆலயத்தை அப்போது யாழ்ப்பாண மேற்றிராணியாராயிருந்த மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவரின் அனுமதியோடு முகமாலைஎன்னும் ஊரில் அமைத்தவவும், மிருசுவில்வாசரான திரு. எஸ். என். சாமுவேல்அவர்களின் செல்வப்புத்திரியுமான செல்வி மேரி பிலோமினு இராசாத்தி என்பவ தனது 13-வது வயசுமுடிந்த கன்னியாய் 1940-ம் ஆண்டு ஆவணிமாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை இரவு தனதுஆத்துமத்தைப் படைத்தோன் கையில் ஒப்புக்கொடுக்கலாளு. இவ பரமபதம்அடைந்த 11-வது ஆண்டு ஞாபகதினம் இந்தமாதம் 29-ந் திகதியானபடியால் இவவின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி இதைவாசிக்கும் குருமார், சந்நியாசர், கன்னியர், பெரியோர், அன்பர்கள் யாவரையும் தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பெற்றோர்

**பாகிஸ்தான் தொழுகைநாள்**

பாகிஸ்தானில்வாழும் எட்டுக்கோடி மக்களிலும் மிகப்பெரும்பான்மையினர் முஸ்லீம்களே. அவர்களின் பாரம்பரியமான தொழுகைநாள் வெள்ளிக்கிழமையே. அதனால்அங்கு ஞாயிறுக்குப்பதில் வெள்ளிக்கிழமையை ஓய்வுநாள் அதாவது பகிரங்க விடுமுறைநாள் ஆக்குவதுபற்றிச் சமீபத்திலேஓர்முடிவுசெய்யப்படவிருக்கிறது. இதுவிஷயமாய் விரைவிலே ஓர்முடிவு செய்வதாகப் பாகிஸ்தான்உள்நாட்டு மந்திரியார் வாக்களித்திருக்கின்றார். அந்நாட்டிலுள்ள கத்தோலிக்கர் இரண்டரைலட்சம் பேர்வரையில்மாத்திரமே. இவர்களைத் தவிர, ஒரு தொகையான புரொட்டஸ்தாந்தகிறீஸ்தவர்களும் அங்குஇருக்கின்றார்கள்.

* * *

—யப்பானிய பாராளுமன்றத்திலே அதன்பிரதமரான யோஷிடாஅவர்கள் சென்ற 18-ந்திகதி பேசியபோது யப்பானிய சமாதானஉடன்படிக்கையில் கையொப்பம்இடமறுக்கும் நாடுகளுக்கும், யப்பானுக்குமிடையே யுத்தநிலைமை பின்னருந்தொடர்ந்து இருந்துவருமெனக் கூறியிருக்கின்றார். நேசநாடுகளெல்லாம் யப்பானுடன் இருந்துவந்த யுத்தநிலைமையைச் சில மாசங்களின்முன் ஒழித்துவிடலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வங்காலைப் பரதசாகியத்தின் முதற்கனி

## வண. அ. பிரான்சீஸ் குலாஸ் சுவாமிகளின்

# குருப்பட்டாபிஷேகம்

வங்காலைப்பதியில் என்றுமே கண்டும் கேட்டும் இராததும், ஆண்டுகள் நானூறாக ஆவலோடு எதிர்பார்த்திருந்ததும், இதன் சரித்திர முதற்பக்கத்தில் பொன்எழுத்துக்களால் பொறித்து வைக்கப்படவேண்டியதுமான அத்துணை மகாவைபவம் ஒன்று இம்மதி 17-ந்திகதி இங்குநிகழலாயிற்று. உலக இரட்சகர் எப்போது உதயமாவாரென்று காத்திருந்த இஸ்ராயேல்மக்களிடையே யேசுபாலன் உதித்தது போன்று, வங்காலைப்பதியும் தன் தலைச்சன்பிள்ளையைக் கண்டுமகிழும் ஆனந்த பாக்கியத்தை அன்று அடையலாயிற்று.

பரதசாகியத்தின் பாதுகாவலரான பிரான்சீஸ்கு சவேரியாரால் நானூறாண்டுகளின்முன் தூவப்பெற்ற கத்தோலிக்கமறையின் திருவித்தானது முளைத்துத்தளைத்துச் செழித்துப் பூத்துக்காய்த்துக்கனிந்து, அவர்நாமம் புனைந்த ஓர் முதற் கனியைக் கண்டு சுவைக்கும் இன்பத்தை அன்றுதினம் அடையலாயிற்று. அர்ச். அன்னம்மாள் கன்னிமரியாயைப் பிறப்பிக்கும் ஞானச்சிப்பியாகத் தெரியப்பெற்றதுபோல, அவகோயில் கொண்டெழுந்தருளியபதியும் ஓர் குருத்துவமுத்துவிளையும் ஞானச்சிப்பியாகத் தேவனால் தெரியப்பெற்று முதன்முதலாக ஆணித்தரமான ஓர் ஞானமுத்தைக் கண்டடையும் அதிஷ்டத்தையும் அடையலாயிற்று.

இங்கு பரதகுலமக்கள் தம்குலம் தளையவேண்டுமெனப் பல்லாண்டுகளாய்க் கொண்டிருந்தஆசை பூர்த்தியாகி ஓர்குலக்கொழுந்து தளைத்த வைபவமும் அதுவேயாயிற்று. இத்தகையஆனந்தநிகழ்ச்சிகட்கெல்லாம்காரணமாய் இருந்தது, வண. அ. பிரான்சீஸ் குலாஸ் சுவாமிகளின் குருப்பட்டாபிஷேகமேயென்க.

ஓ! குருத்துவமே! ஓர் மொழியால் உலகாக்கி அழிப்பவரை ஓர் மொழியால் ஆக்கிஅழிக்கும் உனது உன்னத அதிகார மகத்துவத்தைக் கண்டு எவ்வாறு ஆச்சரியப்படாதிருக்க முடியும்? உனது மகிமையின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து போற்றிப்புகழ வல்லவர் உன்னததேவசுதனன்றி உலகில் எவர்தான் தரம்? இவ்வித உன்னதபதவிக்குரிய பட்டாபிஷேக திருச்சடங்கு முதன்முதல் அவர் ஜனனபதியில், புதியஆலயத்தில், முதல் தமிழாயரால் நிகழ்ந்ததெனின் அதன் உன்னத பெருமையை எவ்வாறு புகழ்ந்துரைக்கலாகும்? அபிஷேக திருவைபவத்திற்கு ஆயத்தம் செய்வதுபோன்று ஆலயம் தனது இடப்பரப்பை விஸ்தரித்து ஆகாயமளாவிய டோமுடன் அலங்கிர்த காட்சியளித்துக் கண்டோர்கண்களைக் கவர்வதாயிற்று. ஆயத்தினமாகும் 16-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் வங்காலை வாயிற்சந்தியில் சனசமுத்திரமாகத் தேங்கிநின்ற இப்பதிமக்கள் பரிவாரங்கள் புடைசூழ எழுந்தருளிய மகாவந். எமிலியானூஸ் ஆண்டவரவர்களை வாத்தியங்கள் இசைக்க, மணிகள் ஆர்ப்பரிக்க, வீதியூடே நிலபாவாடைமீது எழுந்தருளச்செய்து, புதுப்பிக்கப்பெற்ற தங்கள் ஆலயத்திற்கு அழைத்துச்சென்றனர். அங்கு ஆரம்பமாக ஆலயத்தை ஆசீர்வதிக்கும் திருச்சடங்குநிகழ்ந்து, தேவநற்கருணை ஆசீர்வாதம் ஒலிபெருக்கியின் உதவியுடன் அருளப்படலாயிற்று. தொடர்ந்து ஆண்டவர்அவர்களை உயராசனத்தெழச்செய்து, வந்தனோபசார வாழ்த்துக்களுடனும், தட்சணைகளுடனும் தங்கள் நன்றித்துதியை எல்லோரும் தெரிவித்து நின்றார்கள்.

மறுநாள் 17-ந்திகதி தினகரனும் தன்கதிர்களைப்பரப்பிஆகாயமண்டலத்தில் பவனியெழுந்தான். பதிமுழுவதும் ஒரே ஆரவாரம். இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து குழுமிய குருவர்களாலும், பிரமுகர்களாலும், ஏனைய மக்களாலும் ஆலயம் எள்ளிட இடமில்லாதிருந்தது. மகாவந். ஆண்டவரவர்கள் 35 குருமார்கள் புடைசூழக் குருமனையினின்றும் பவனிகொண்டு ஆலயத்தையடைந்து வங்காலைப்பதியின் முதற்குருப்பட்ட திருச்சடங்கை நிறைவேற்றி மற்றோர் கிறீஸ்துநாதராம் வண. பிரான்சீஸ் குலாஸ் சுவாமியவர்களை அபிஷேகித்தருளினார். இந்த அபிஷேகதிருச்சடங்கின் விளக்கம் வண. பீற்றர் சுவாமிகளால் ஒலிபெருக்கியின் துணையொடு குழுமியமக்கட்கு விளக்கிக்காட்டப்பட்டது. பூசைமுடிவில் புதியகுரவர் நடுநாயகமாய்அமரப் பிரதிமைப்படம் பிடிக்கப்படலாயிற்று.

அடுத்தநாட்காலை மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர்வர்கள் தலைமையின்கீழ் புதியகுரவர் தமது முதல் திவ்வியபூசைப்பலியை நிறைவேற்றித் தம்முடைய ஜனனபதி தேவ அழைத்தலில் மேலோங்கிவளரத் தேவனைப் பிரார்த்தித்து நின்றனர். அத்தருணம் வண. சற். என். குரூஸ் சுவாமிகள் குருத்துவத்தின் மகிமையைப்பற்றிச் செய்தபிரசங்கம் சர்க்கரைப்பந்தரில் தேன்மாரி பொழிந்தவாறாய் ஞானச்சுவை ஊட்டிநின்றது. குருப்பட்டாபிஷேக சம்பந்தமாய் இருமேற்றிராணிமாரின் திருச்சமுகம் கிடைத்தமை எவர்க்கும்கிட்டாத ஓர் அதிஷ்டமென்பது இங்கு குறிப்பிடற்பாலது.

பூசைமுடிவில் இருமேற்றிராணிமார்களுக்கும், புதியகுருப்பிரசாதிக்கும் வந்தனோபசார வாழ்த்துக்களும், தட்சணைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. தொடர்ந்து புதியகுருப்பிரசாதி தமது சகோதர குருப்பிரசாதிகளுடன் தமது பெற்றாரின் இல்லத்துக்கு அழைத்துக்கொண்டு போகப்பெற்று, அங்கே அவர் தந்தையரான திரு. க. அந்தோனி குலாஸ் அவர்களாலும், பொதுமக்களாலும் அன்பாகவரவேற்று உபசரிக்கப்பட்டனர். குரவர்கள் பலரும், அறிஞர்சிலரும், சுவாமிகளின் குருத்துவமகிமை, குடும்பமகிமைகளை எடுத்துக்கூறி மனமாரப்புகழ்ந்தனர். மறுநாள் ஞாயிறுவாரம் புதியகுரவர் தமது முதற்பாடற்பூசையை நிறைவேற்றித் தமது அபிஷேக ஞாபகார்த்தங்களை வழங்கினர். இன்னும் தொடர்ந்து அடுத்தபுதவாரம் மரியாயின் மாசற்ற இருதயநாயகிபோரால் ஓர் தோத்திர பாட்டுப்பூசை நிறைவேற்றியபோது இப்பதிச்சிறுவர் ஐம்பதின்மர் அவர் கரத்தால் முதல்நன்மைபெறும் பாக்கியம் அடையலாயினர்.

ஈற்றில், இவ்வித மகத்தான வைபவத்திற்கு ஆதியோடந்தமாய்க் காரணமாயிருந்த வண. எம். எஸ். நல்லையா, வண. கோமஸ் சுவாமிகட்கு வங்காலைப்பதியானது தனது மனமார்ந்த நன்றித்துதியைச் சமர்ப்பிக்கின்றது. எங்கள் முதற்குரவர் என்றும்வாழ்க! பரதசாகியத்தில் இன்னும் பலகுரவர்கள் உதயமாகுக!! சுபம்!!

—விசேஷ நிருபர்.

---

—தென்கோறியகுடியரசு ஐ. நா. ஸ்தாபனத்துக்குத் தனதுநன்றியின் அறிகுறியாக இருவிசேஷ தபால்முத்திரைகளைப் பாவனைக்கு விடுக்கவிருக்கின்றது. முதற்தபால்முத்திரைகள்வருகிறபுரட்டாசிமாசம் 1-ந்திகதி விடுக்கப்படும். அவற்றில்ஒன்று ஐ. நா. கோறியாவிலே போராடிவருகின்ற படைகளைக்கொண்ட 16 நாடுகளினதும்கொடியிலே மாடப்புறாவைக் காண்பிப்பதாகும்.

## நானா சங்கதிகள்

—இரண்டாவது உலகயுத்தம் முடிந்தபின்னர் முதன்முதலாக அமெரிக்க கடற்படையானது சாமான்கள் ஏற்றி யிறக்கும் தனது கப்பல்களை ஆயுதபாணிகளாக்குவதை ஆரம்பிக்கத் திட்டஞ்செய்கின்றது. அதன் 25 சாமான் கப்பல்களும், எண்ணெய்க்கப்பல்களும், தொகையான கரைக்காவற் கப்பல்களும் பீரங்கிகளையும், றடார்களையும் கொண்டிருக்கும்.

—பரிசுத்த யூபிலிவருடத்தைச் சம்பிரதாயமுறைப்படி முடிவுக்குக் கொண்டுவருமாறு வருகிற ஐப்பசி மாதத்திலே பாத்திமாபதியில் நடந்தேறவிருக்கின்ற திருவைபவங்களின்போது தமது பிரதிநிதியாக இருக்கும்படி பரிசுத்தபாப்பரசர் ஓர் கருதினாலை நியமனஞ்செய்திருக்கின்றார். இந்தவைபவங்களின்போது ஐம்பதினாயிரம் யாத்திரிகர்கள் சமுகமாவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

—பரீஸ்நகரின் 2,000-ம்வருட நிறைவு விழாக் கொண்டாட்டங்களின்போது பிரான்சில் சமுகமாயிருந்த 43 ஆபிரிக்க சிற்றரசர்கள் லூர்துதிருப்பதியைத் தரிசித்துச் சென்றிருக்கிறார்கள். சென்ற வருடம் ஆபிரிக்காவிலிருந்து அங்கு சென்ற யாத்திரிகர்கள் கூறியவைகளைக் கேட்டதிலிருந்து அத்திருப்பதியைப் பற்றியகரிசனை அவர்களிடம் எழலாயிற்று.

—பாத்திமாமாதாவின் யாத்திரைச் சுரூபமானது ஆஸ்திறேலியாவில் சுற்றுப்பிரகாரஞ்செய்து கொண்டிருந்தபோது அது டார்வின் நகருக்கப்பால் சணல்தீவிலிருக்கும் குஷ்டரோகர்களின் குடியேற்றதலத்துக்கும் கொண்டுபோகப்பட்டது. அங்குள்ள குஷ்டரோகர்கள் அதனைத்தொட அனுமதிக்கப்படவில்லை. ஆனால், அச்சுரூபத்தின் கரங்களிலிருந்து தொங்கிய பவளச்செபமாலை அவர்கள்மத்தியில் விடப்படலாயிற்று.

—இந்தியாவிலுள்ள ஒரேயொரு ஆகாயவிமானங்கட்டும் தொழிற்சாலையாய்ப் பங்களூரிலிருந்துவருகின்ற இந்துஸ்தான் ஆகாயவிமானத் தொழிற்சாலையாலே நிர்மாணித்துக் கட்டப்பட்ட முதல்இந்திய ஆகாயவிமானம் பரிசோதனைநிமித்தமாகச் சில தினங்களின்முன்னர் முதன்முதலாகப் பறக்கவிடப்பட்டு அனுகூலமுண்டாயிருக்கிறது. "எச்ரி 2" என்ற இந்தப் பயிற்சிவிமானம் தனதுபரிசோதனைப் பிரயாணத்தில் நான்குமணித்தியாலத்துக்குமேல் ஆகாயத்தில் பறந்துசெல்லலாயிற்று.

—சான்பிரான்சீஸ்கோநகரில் நடைபெறவிருக்கும் யப்பானிய சமாதான உடன்படிக்கை மகாநாட்டில் கலந்துகொள்ளும்படிகேட்டு அமெரிக்கஐக்கியதேச அரசாங்கம்விடுத்தஅழைப்பை 44 நாடுகள் ஒப்புக்கொண்டிருப்பதாக அமெரிக்க அரசாங்கபகுதி சென்றவெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

—அமெரிக்க, பிரித்தானிய, ஒல்லாந்தஎண்ணெய்க்கம்பெனிகள் சென்ற 1950-ம்ஆண்டிலே 48 கோடி தொன் பெற்றோலியம் வடித்திருக்கின்றன. அதாவது அவ்வருடத்திலே உலக முழுவதிலும் மொத்தமாக வடிக்கப்பட்ட 54 கோடியே 30லட்சம்தொன் பெற்றோலியத்தில் நூற்றுக்கு 88வீதமும் அவைகளாலே வடிக்கப்பட்டுள்ளது.

—பிரயாணிகள் 42 பேரும், விமானிகள் 6 பேருமாக 48 பேர்சென்ற அமெரிக்கபாரிய பிரயாணவிமானம் ஒன்று சென்றவெள்ளிக்கிழமை கலிபோணியாவைச்சேர்ந்த ஒக்லன்ட்நகருக்குச்சமீபமான மலைத்தொடர்ஒன்றில்மோதி அக்கினிபற்றிக்கொண்ட காரணமாக அத்தனைபேரும் சீவமோசம் அடைந்தார்கள். அதுவிமான நிலையத்தில்இறங்க இன்னும் எட்டு நிமிஷம் இருக்கும்போது இவ்விபத்து ஏற்பட்டதாம்.

---

## பாடசாலைக்கோணம்

### தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

1951-ம் ஆண்டு ஆவணிமாதத்துக்கும் அதற்குமுந்திய மாதங்களுக்குமுரிய பாடசாலைப்பிள்ளைகளின் பகற்போசன உரிமைப்பத்திரங்கள் (Feeding Claims) **5-9-51**-க்குப் பிந்தாமல் வித்தியாகந்தோருக்கு அனுப்பப்படவேண்டுமென்று தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

1951-ம் ஆண்டு ஆவணிமாதத்துக்குரிய பண உரிமைப் பத்திரங்கள் 31-8-51-இல் நமக்கு அனுப்பப்படவேண்டும்.

5-9-51-க்குப்பின் வித்தியாகந்தோரிற் கிடைக்கும் பகற்போசன பண உரிமைப்பத்திரங்கள் முற்றாக அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளாது தள்ளிவிடப்படுமென வித்தியாதிபதி தெரிவிக்கிறார்.

T. A. J. MATHURANAYAGAM
Gen. Manager, R. C. Schools
Jaffna, 27-8-51.

---

## பிரிவுஉபசார விழா

மூதூர், அர்ச். அந்தோனியார்கலாசாலை ஆசிரியராய்க் கடந்தஇருஆண்டுகளாகக் கடமையாற்றிவந்து தற்போது மூதூர்க் கிராமத்தலைமைக்காரனாக நியமனம்பெற்றுச்செல்லும் திரு. அருளப்பு கொறெறுஅவர்களுக்குச் சென்ற 14-ந் தேதிகாலை ஓர்பிரிவு உபசாரவிழா நடாத்தப்பட்டது. பகல் 11மணிக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் அவரை அழைத்துச்சென்று அலங்கரிக்கப்பெற்ற கலாசாலைமண்டபத்திலே உயராசனத்தில் அமரச்செய்ததும் மாணவரின்பாமாலைகளும், பூமாலைகளும், அன்பளிப்புகளும் அவர்மட்டிலேஅவர்கட்குள்ள அன்பையும், அவர் கலாசாலைக்குஆற்றிய சேவையையும் நினைவுறுத்தின. தலைமைஆசிரியரும், ஆசிரியர் வஸ்தியாம்பிள்ளையும் அவரதுசேவையை வியந்து பேசினர். ஆசிரியர் இம்மானுவலின் புல்லாங்குழல்கச்சேரி சபையோரை ஆனந்தத்தில்அமிழ்த்தியது. மறுநாட்காலை ஆலயத்தில் தோத்திரபாடற்பூசை நிறைவேறியபின் அர்ச். அந்தோனியார்கலாசாலை மண்டபத்தில் அதன்ஆசிரியர்களால் அவருக்குஓர் பிரிவுஉபசார விருந்தளிக்கப்பட்டது. அதற்கு மூதூர்க் கட்டளைக்குரவர் வண. கமில்ரன் சுவாமியவர்கள் தலைமை வகித்தனர். அவ்வமயம் சுவாமியவர்கள் அவரதுசேவையைப் பாராட்டி அவரது புதியபதவிக்கான சிலநன்மதிகள்மொழிந்தனர். சமுகமளித்தஆசிரியர்கள் அனைவரும் பிரிவுஉபசாரநாயகரைப்பாராட்டிச் சொற்பொழிவாற்றியபின் அவர்எழுந்து, தமக்கு ஓர் சிறந்த விருந்துபசாரணையை நடத்திய ஆசிரியர்களுக்கு நன்றிபாராட்டினர். தாம்கிராமத் தலைமைக்காரனாகக் கடமையாற்றினும் தமது உதவி எப்போதும் கலாசாலைக்குக் கிடைக்குமென உறுதிகூறினர். பிரிவுஉபசார விருந்துகள்அளிப்பது வழமையிலே ஆங்கிலக்கல்லூரிகளிற்றான். ஆயினும் எமதுதமிழ்க்கலாசாலையிலும் அப்படி நடக்கக்காண்பது மிகவும்சந்தோஷம் எனச் சுவாமியவர்கள் தமதுமுடிவுரையிற்கூறி விருந்தைச் சிறந்தமுறையில் நடத்திவைத்த திரு. S. பெனடிக்ற் ஆசிரியரையும், அவருக்குஉதவியாய் நின்ற திரு. Y. இம்மானுவல், திரு. S. பஸ்ரியாம்பிள்ளை ஆசிரியர்களையும் பாராட்டினார். திரு. S. பெனடிக்ற் ஆசிரியரது நன்றியுரையுடன் பிரிவு உபசாரவிழா முடிவெய்தியது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**புரட்டாசிமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| சனி | 1 | அர்ச். எசிதியார் | (வெ) |
| ஞா | 2 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 16-ம் ஞாயிறு — அர்ச். முடியப்பர் | (ப) |
| திங் | 3 | அர்ச். செருப்பியம்மாள் | (ப) |
| செ | 4 | அர்ச். ரோசம்மாள் | (ப) |
| புத | 5 | அர்ச். யுஸ்தினியா லவுறேஞ்சியார் | (வெ) |
| வியா | 6 | அர்ச். ஒனெசிப்போர் | (ப) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

ஆவணிமாதம் 30-ந் திகதி

## மூன்றாவது உலகயுத்தம்

“கம்யூனிஸ்தர்கள் வருகிற புரட்டாசிமாதத்தின் நடுப்பகுதியிலே பிரான்சிய-இந்தோசீனாவில் படையெடுத்து, அதனை மற்றோர் கோறியாவாக ஆக்கிவிடுவார்கள ; அவர்கள் பிரான்சிய இந்தோசீனாவை எதிர்த்துப் போரில் இறங்கும்படியாய் இரண்டுலட்சம் போர்வீரர்களை அனுப்பிவைக்க ஆயத்தப்படுகின்றார்கள் ; ஆனால், பிரான்ஸ் 1 லட்சத்துத் 90ஆயிரம் போர்வீரர் வரையில்தான் கொண்டிருக்கிறது ; அதனால் எவர் வெற்றிபெறுவாரென்று சொல்வது கஷ்டமாகின்றது. சிலவேளை இருபகுதியினருமே தோல்வியடையலாம ; கோறியாவில் இருகட்சிகளுமே தோல்வியடைந்ததிலிருந்து கம்யூனிஸ்தர்கள் சமாதானத்தை நாடினார்கள் ; மூன்றாவது உலகயுத்தம் ஒன்று நடைபெறமாட்டாதென்பதே எனது அபிப்பிராயம் ; ஆனால், உலக இரண்டரையாவதுயுத்தம் இப்போது கோறியாவில் நடைபெறுகின்றது ; அங்கே இது நடைபெற்று முடிவுறுங்கால் அது இந்தோ-சீனாவில் தலைகாட்டுவதாகும் ; பின்பு அநேகமாய் இந்தஅரை யுத்தம் சியநாட்டில் ஏற்படலாம்” என்று ஐக்கியநாடுகளின் பிரபலயுத்தநிருபரும், சென்ற ஞாயிறன்று கொழும்புகண்டு போகிறவருமான திரு. புறாஸ் தோமாஸ் அவர்கள் கூறிப்போகின்றார். இவர் கோறியயுத்தநிறுத்த மகாநாட்டுச் சம்பாஷணைகளின்போது கேசோங் நகரில் அநேகபத்திரிகைகளின் நிருபராய் இருந்தவர். உண்மையைக்கண்டறிவதே இவரின் உண்மைநோக்கமாகும். அங்ஙனமாக மூன்றாவது உலகயுத்தம் மூளுகிறதாயின் அதற்குச் சோவியற்அரசே முதல்அடி எடுத்து வைக்கவேண்டும். ஆனால், இன்றையநிலைமையில் அமெரிக்கவரசினதும், ஏனைய ஐக்கியநாடுகளினதும் பலம் நாளுக்குநாள் அதிகரிக்கு முன்னரே அதுயுத்தத்தில் இறங்க வேண்டும் இற்றைக்கு நான்கு மாதங்களின்முன் அமெரிக்கவரசு 29லட்சம் போர்வீரர்களையும், ஏனைய சுதந்திரநாடுகளின் சேனைகள் 37½ லட்சம் போர்வீரர்களையும் ஆயுதபாணிகளாக்கக்கொண்டிருந்தன. அடுத்த கோடைகாலத்திலே அமெரிக்கவரசுபூரணமாகப் படைதிரட்டிவிடும்போது, மேலைத்தேசங்களின் சேனை சைனியங்கள் சோவியற் சைனியங்களிலும் வெகுவாக அதிகரித்துவிடும். இப்போது சோவியற்அரசு 45 லட்சம் போர்வீரர்களுடன் கூடிய பெருஞ்சேனைபலத்தைக் கொண்டிருக்கிறது. ஆகவே, அது தற்போதைய சந்தர்ப்பத்தைப்பயன்படுத்துவது அவசியமாயிருக்க, அவ்வாறுபயன்படுத்தாத காரணம் என்ன? அதற்குள்ள பலக்குறைவேயாகும. ஆட்பலத்தை அதிகமாகக் கொண்டிருந்தும் ஏனையமுக்கிய விஷயங்களில் அது இன்னுமே ஆயத்தமாயில்லை. ருஷியாவிலிருந்து தப்பியோடிக்கொண்டிருக்கும் பட்டாள அதிகாரிகளும், போர்வீரர்களும் அறிவிக்கிறபடி, 1954-ம் ஆண்டுக்கு முன் அது பூரணமாகத் தயாராகமாட்டாது. மேற்குஐரோப்பியநாடுகளிலே படையெடுப்பதற்கென்று தனது ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியில் அதுசெய்துவரும் ஆயத்தங்கள் ஆமைவேகத்தில் நடைபெற்றுவருவதே இதற்குப் போந்த சான்றாகும். கோறியாவில் அதுமூட்டிவிட்டயுத்தம் தனது தாங்கிகள், விமானங்கள், பீரங்கிகளின் நிலைமையைக் கண்டறிவதற்கான ஓர் பலப் பரீட்சையேயன்றிப் பிறிதொன்றுமல்ல.

## சாட்டி (வேலணை)
## சிந்தாத்திரைமாதா திருநாள்
## 24—9—51

இத்திருநாளுக்கு முந்தியதிருவிழாக்கள் 11-9-51 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 23-ந்திகதி வேஸ்பருடனும், அடுத்த நாட்காலை பாடற்பூசையுடனும், தேவதாயாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் திருநாள் முடிவாகும.

கவனிப்பு :— 1. யாத்திரிகளின் வசதிக்கென இன்னுமோர் மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. யாத்திரிகள் சகலரும் இதே மண்டபத்தில் தங்கிவருவது மிகவும் விரும்பத்தக்கது.

2. கோவில் திருப்பணிநிதிக்கு உதவிசெய்த சகலபேருபகாரிகளுக்காகவும் திருநாளுக்கடுத்தநாள் 25-9-51 செவ்வாய்க்கிழமை ஓர்பாடற்பூசை நிறைவேறும்.

**Louis Joseph O. M. I.**
கட்டளைக்குரு

## யப்பானிய சமாதான உடன்படிக்கை

நேசநாடுகள் யப்பானுடன் கூடியவிரைவிலே ஓர்சமாதான உடன்படிக்கை செய்துகொள்வது ஆட்சேபனைக்கிடமாகாது. ஆனால், அந்தஉடன்படிக்கைபற்றிய பலவிதநிபந்தனைகள் நேசநாடுகள் எல்லாவற்றிற்கும் உடன்பாடானவையன்று. தன்னையேஆக்கிரமிக்கும் ஓர் பலமான கருவியாக அந்தஉடன்படிக்கை இருப்பதாகுமென்று சோவியற்அரசு கருதுவதும் ஓர் ஆச்சரியமன்று. ஆனால், உலகில் இருகட்சிகளாகப் பிரிந்து நிற்கும்நாடுகளுக்கு வெளியே இருந்துவரும் பர்மாவுக்கு இந்தச்சமாதான உடன்படிக்கை முற்றும் விருப்பமாகாது. ஏனெனில், அவ்வுடன்படிக்கையிலே யப்பானால் வெகுவாக நஷ்டம் அடைந்த அந்நாட்டுக்கு அது நஷ்டபரிகாரஞ்செய்யவேண்டிய நிபந்தனை எதுவும்மற்றாகவேயில்லை. ஆயின் பர்மாவிலே யப்பானியபடைகளின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டுள்ளநஷ்டம் பரிகரிக்கமுடியாத அத்துணைபெரியதாகும். அதாவது 1,267 கோடியே50லட்சம்ரூபாவரையிலாகும். அவ்வாறே பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இந்தோசீனாமுதலாம் நாடுகளும் அதன் ஆக்கிரமிப்பாலே பரிகரிக்கமுடியாத பெருநஷ்டம் அடையலாயின. ஆனால், அமெரிக்கவரசு யப்பானிய சமாதானஉடன்படிக்கையை அதிகம் உதாரகுணமாகவும், நஷ்டபரிகாரமென்ற கேள்விக்கே இடமில்லாமலும் ஒழுங்குபடுத்தியிருக்கின்றது. அதற்கிடையிலே அமெரிக்காவின் உதாரமானகொடையைப் பெற்று யப்பான் பிரமிக்கத்தகுந்தவிதமாகத் தீவிரபொருளாதார விருத்தி அடைந்துகொண்டிருக்கின்றது. இந்த உடன்படிக்கைநகலைத் தலைமையாய்நின்று தயாரித்தவர் திரு. ஜோன் டல்லெஸ்எனும் அமெரிக்கரே. அவர் இந்தஉடன்படிக்கையானது யப்பான்இனிமேல் தலைதூக்கமுடியாதவகையில் அதைமடக்கிவைப்பதாகவோ, அன்றேல் பளுவான நஷ்டபரிகாரங்கள் இறுக்கும்படிசெய்து அதனைப்பழிவாங்குவதாகவோ இருக்கமாட்டாதென்று பெருமை பாராட்டுகின்றார். வேர்சேல்ஸ்நகரில் செய்யப்பட்ட ஜேர்மனியசமாதானஉடன்படிக்கை மிகவதிகமான நஷ்டபரிகாரங்களாலே நீதியில் தவறியதாயிருந்தால், யப்பானிய சமாதான உடன்படிக்கை யப்பான்மட்டில் காண்பிக்கப்படும் அதிமிக தயாளத்தாலும், அதன் ஆக்கிரமிப்பாலே வெகுவாகக் கஷ்டநஷ்டத்துக்குள்ளான நாடுகளுக்குச் செய்யப்படும் அநீதத்தாலும் நீதியில் தவறியதாகும். ஆயினும்அன்று முதலாவது உலகயுத்தத்தில் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டபோது, வேர்சேல்ஸ்நகரில் செய்யப்பெற்ற சமாதான உடன்படிக்கையிலே அது இனிமேலும் இராணுவபலங் கொள்ளாதிருக்கப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. என்றாலும் அது பையமெல்ல அந்தரங்கமாகவும், பிறகு பகிரங்கமாகவும் அந்த நிபந்தனைகளை மீறத்தொடங்கியபோது அதனை அடக்கிவைக்க நேசநாடுகளால் இயலவில்லை. யப்பானுக்கும் அத்தகைய நிபந்தனைகளை விதித்தபோதிலும் கருமம் அதேமாதிரியாகத்தான் நடந்தேறுமென்று சொல்லவேண்டியதில்லை. அதனால், யப்பானிய இராணுவபலத்தையோ, அன்றேல் அளவையோ கட்டுப்படுத்தும்நிபந்தனை இவ்வுடன்படிக்கையில் இல்லை. மற்றும் அதன் தொழில் – பொருளாதாரபலத்தைக் கட்டுப்படுத்தும் நிபந்தனையும் அதிலே இல்லை. சுருங்கச் சொல்லுமிடத்து, உடன்படிக்கைநிறைவேறி அது நடைமுறைக்கு வந்ததும் யப்பான் முன்போலப் பூரண ஆதிபத்திய சுதந்திரநாடாகிவிடும். அவ்வாறு சுதந்திரநாடாகுமிடத்துச் சோவியற்அரசின் ஆக்கிரமிப்புக்குத் தூரகிழக்கிலே பெரியஅரண் ஏற்படும். யப்பானிய கைத்தொழில் — வர்த்தகம் ஆதியன விருத்தியடைந்து பிறநாடுகளுக்குப் பெருநன்மையுண்டாக்கும். யப்பானை அலட்சியஞ்செய்யாது இந்தவேளை அதனுடன் சமரசமாகநடந்துகொள்வதே சமயோசிதமாகும்.

## தமிழ் இலக்கிய கழகச் செய்திகள்

1. “தமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர்” எனும்நூலை, திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தார், 1952–1954 ஆண்டு B. A. தேர்விற்குப் பாடபுத்தகமாக நிறுவியுள்ளனர். “தமிழ்த் தொண்டர் வேதநாயகம்பிள்ளை” எனும் புதியதொருநூலை கழகப்புலவர்யாத்து வருகின்றனர். பிரதாபமுதலியார் சரித்திரத்தின் புதியபதிப்பு ஒன்று விரைவில் கழகவாயிலாய் வெளியாகும். தற்போது அச்சில்இருக்கிறது.

2. தமிழ்இலக்கியக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இசைந்து, தமிழ்க் கலைக்களஞ்சியப் பேராசிரியர் திருவாளர் பெரியசாமித் தூரனார், அக்களஞ்சியத்தில் சேர்த்தற்குரிய கத்தோலிக்கத் தொடர்புடைய கட்டுரைகளின் தலைப்புநிரலைக் கொடுக்குமாறு வேண்டினர். எனவே, தமிழ்நாட்டுக் கத்தோலிக்கத் தொடர்புடைய ஏறக்குறைய ஐம்பது பொருள்பற்றிய கட்டுரைகளைச் சேர்க்குமாறு கழகத்தார் கேட்டுள்ளனர்.

3. புரட்டாசித் திங்கள் 5-ம்நாள் மாலை 7¾ மணிக்கு, திருச்சிராப்பள்ளி வானொலிநிலயத்திலிருந்து, “தமிழ் வளர்ச்சியும், இற்றைய இலக்கியமும்” எனும் பொருள்பற்றி, அறிஞர் தனிநாயக அடிகள் உரைநிகழ்த்துவார்கள்– மினபதிலில் ஒலிபரப்பப்படும்.

## குருமார் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் இரண்டாவது பிரிவான ஞானஒடுக்கம் சென்ற 28-ந்திகதி செவ்வாயன்று பிற்பகல் ஆரம்பமாயிற்று. 25 குருமார் வரையிலே இதற்குச் சமுகமளித்திருக்கின்றனர். அதிவண. ஏ. செறுசுவாமியவர்களே போதகஞ்செய்கின்றார்

## பாப்பரசின் மகிமைவிருது

திரு. ஏ. எச். ரி. டி சொய்சா அவர்கள் கத்தோலிக்க ஸ்தாபனங்களுக்கும், மற்றும் பரோபகார சேவைகளுக்குமாகச் செய்துள்ள தர்மகைங்கிரியங்களைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அவருக்குப் “பெனெ மென்ரி” எனும் மகிமைவிருது சங்மானித்திருக்கிறார். இலங்கையிலே கத்தோலிக்கர் அல்லாதாருள் முதன்முதலாகப் பாப்பரசரின் மகிமைவிருதுபெற்ற பிரமுகர் இவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவிலும் - நினைவிலும்

(வாழைக்குட்டி வரைவது)

(முன்தொடர்ச்சி)

அருமைபெருமையாய், இல்லை இல்லை, பெரும் அதிர்ஷ்டவசமாய் நான்கண்டடைந்த "வாழைக்குட்டி" யென்ற புனைபெயரைக் கண்ணுற்றோர் பலரும் இதென்னடா! ஒருநாளுமில்லாத ஒருவேடிக்கையான புதுப்பெயராய் இருக்கிறதேயென்று ஒருகால் புன்னகைசெய்துகொண்டனராம். "வாழைப்பழம்" என்று போட்டிருந்தால் வாய்க்கிதமாகவும் இருந்திருக்குமேயென்று சிலர் வாயூறிக்கொண்டனராம். வாழைக்குட்டியை ஆட்டுக்குட்டிகண்டால் வாய்வைத்துவிடுமேயென்று வேறுசிலர் ஹாஸ்யமாகப் பேசிக்கொண்டனராம். பொதுவிலே வாழைக்குட்டிக்கு நல்லவனென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறதாம். அதனால்அதுவும் உச்சிகுளிர்ந்து, உள்ளம்பூரித்து இதுவரைஒருமுழம் கூடமுதலாய் வளர்ந்திருக்கிறதாம்.

* * *

நிற்க, வாழைக்குட்டி தான்எழுதத் தொடங்கியதைப் பின்னருந்தொடர்ந்து எழுதப்போகிறதாம். அடுத்த இதழில் தான் எடுத்துக்கூறுவதாகச் சொன்ன அப்பரமானந்த காட்சியைப் பற்றி இனிவரையப் போகிறதாம். பஞ்சுபோலும் வெண்மேகங்களிடையே இருசெஞ்சுடர்களேயென்னப் பெரிதும் நரைதிரைகொண்ட அவர்களின் திருவதனங்களில் அப்போதுதோன்றிய மாசற்ற ஆநந்தப்புன்னகையின் மலர்ச்சியோ இப்போதுமே மறக்கமுடியாவண்ணம் மனக்கண்முன்பாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறதே. அன்றுகாலை அவர்களின் மலர்வதனங்களில்தோன்றிய மனோகர சாந்தியையும், வசீகரகாந்தியையும் கவனித்தஎன்உள்ளம், இல்லை, என்னோடு நின்றோர் எல்லோரதுஉள்ளமுமே சந்தோஷத்தால்மலர்ந்து அப்பெருங் குருமுனிவர்களின் திருவடிகளை வணங்கி ஆசிபெறும்படியாகத் தாமாகவே அனைவரையும் ஏவித்தூண்டினவாம்.

* * *

ஆம், உந்தலட்சியத்தைக்கொண்ட அவர்களது உலகசீவியத்தில் அன்றுதினம் என்றுமேஇல்லாத அதிமிக ஆனந்த சுபதினமென்று கூறவேண்டியதேயில்லை. அவர்கள் தமதுகுருத்துவ பொன்யூபிலியைக் கொண்டாடிய பொன்னனதினம்அது. தமது உடல் பொருள் ஆவி மூன்றினையும் அர்ப்பணஞ்செய்து ஆண்டவரின் திருவூழியத்திலே ஐம்பதுபூரண ஆண்டை—அரை நூற்றாண்டைக் கண்டுகொள்ளும் அதிர்ஷ்டத்தைப்பெற்ற அருமருந்தன்ன அருமையான தினம் அது. போனகாரியங்களைச்சாதித்து வாகைமாலைசூடிய வீரர் திலகங்களேபோல் அப்போதுஇருவருமே பேரின்பவெள்ளத்தில் மூழ்கியிருந்தபோதிலும் ஆழிய சமுத்திரம்போன்று அந்தவேளை அவர்களிற்காணப்பட்ட பூரணஅமைதியில் யாவருமே லயித்துப்போயினராம். ஆமாம், இது எல்லோருக்குமே கிட்டுகிற பாக்கியமல்ல. எதற்கும் கொடுத்துவைக்க வேண்டுமல்லவா?

* * *

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே தங்கள் குருத்துவ பொன்யூபிலியைக் கொண்டாடியுள்ள குருதேசிகர்களாய் இப்போது நால்வர் இருக்கின்றனர். இவர்களிலெல்லாம் மூந்தியவர் வண. என். சக்தியாகுச் சுவாமியவர்கள்தான். வருகிற ஐப்பசிமாதம் 1-ந் திகதியன்று, அதாவது இன்னும் 31 நாளிலே சுவாமிகளுக்கு 82 வயசு பூர்த்தியாகவிருக்கிறது. அவர் இற்றைக்குச் சுமார் 54 வருடங்களுக்கு முன், அதாவது 1897-ம் ஆண்டு மாசிமாதம் 11-ந் திகதியன்று குருப்பட்டம்பெற்றுக்கொண்டார். இலங்கையிலே தற்போது சீவந்தராயுள்ள குருப்பிரசாதிகளில் அதிக காலங்கண்டவர் என்றபெருமை சுவாமிகளுக்கே உரியதாம்.

* * *

ஒரேநாளில், ஒரேவேளையில் ஒருங்கே குருப்பட்டம்பெற்று யாழ்ப்பாணத்தில் உதயமான மூச்சுடர்களில் இரண்டும் ஏலவே அஸ்தமித்துப்போக, இன்றுசுவாமிகளே ஓர்தனிச்சுடராக நின்று இலங்குகின்றார். இன்றைக்குமே கூனுமல்கொள்ளாமல் அவர் நிமிர்ந்துநடப்பதையும், உட்கார்ந்திருப்பதையும் கவனிக்குமிடத்து அவரை ஓர் "இரும்புமனிதர்" என்றே சொல்லவேண்டியிருக்கிறதாம். இந்தத் தள்ளாமையான காலத்திலும் மூக்குக் கண்ணாடியை அவர்முகம் கண்டறியாதாம். அன்றொருநாள்அவர் ஒரே நடையாகப் பத்துமைல் நடந்துபோன சம்பவத்தைச் சொல்லக்கேட்டபோது வாழைக்குட்டிக்குப் பெரும்ஆச்சரியம் மாத்திரமல்ல, பெரிய பரிதாபமும் உண்டானது.

* * *

சுவாமியவர்கள் எந்தவிதமான அலுப்பையும், ஆயாசத்தையும் கடுகத்தனையுமேசிந்தியாது இரவுபகலாய் மணிக்கணக்காக வீற்றிருக்கப் பழகியுள்ள ஓர்மணிச்சிம்மாசனம்இருக்கின்றது. அதற்குப் பஞ்சுமெத்தையும் கிடையாது. பசும்பொற் சாய்மானமும் கிடையாது. அவர் எந்தவேளையும் காட்சியளிக்கும் பாவசங்கீர்த்தனத்தட்டியே அந்தச் சிம்மாசனம். அதிலே அவரைக் களைக்கப்பிடிக்கிறதென்றால் எந்தமனுவாலும் இயலும் கருமம்அல்ல. சுவாமிகள் ஓர்பெரிய ஆன்மவைத்தியராய் மாத்திரமல்ல, சரீரவைத்தியராயுமிருந்து தாம்போன இடங்களிலெல்லாம் எத்தனையோ பேரின் பிணிகளைக்குணமாக்கிவந்து நல்லபேர் எடுத்திருக்கின்றார். சுவாமிகளுக்குப் பல்லாண்டு!

* * *

தமது குருத்துவபொன்யூபிலியைக் கொண்டாடியுள்ள மற்றோர் குருப்பிரசாதி, தற்சமையம் ஊறணிக்கட்டளைக் குருவாராய் இருந்துவருகின்ற வண. யோசெவ் அல்போன்ஸ் சுவாமிகளே. வருகிற மார்கழிமாதம் 5-ந் திகதி இவருக்கு 78 வயது பூர்த்தியாகின்றது. அம்மாதம் 17-ந் திகதியன்று இவர் குருப்பட்டம்பெற்று 52-வது ஆண்டு நிறைவாகின்றது. சுவாமிகளை நினைக்குந்தோறும் அந்தநாளிலே இரண்டாம்வகுப்பிற்படித்த "தேக்கமரமும், தருப்பையும்" என்ற பாடத்தின்ஞாபகம் வாழைக்குட்டிக்குத் தானகவே வந்துவிடுகிறது. தேக்கமரங்கள் போன்று திடகாத்திரமுடையோராய், லெபனன்மலையின் இராட்சதவிருட்சங்கள் போன்றவர்களாய் வாழ்ந்திருந்த எத்தனையோ மலையானமலைகள் சரிந்துபோயினமையை வாழைக்குட்டி கண்டிருக்கிறது. ஆனல், அடிக்கின்ற பெருங்காற்றுக்கும், நெடுங்கானலுக்கும் எப்போதுமே சுழன்றுசுழன்று, துவண்டுதுவண்டு எழுந்துநிற்கும தருப்பைகள்போலும் எத்தனையோபேர் இன்னமும் சீவந்தராய் வாழ்ந்திருப்பதையும் வாழைக்குட்டி கண்ணாரக் கண்டிருக்கிறது. இப்படியான பேர்களில் சுவாமிகளும் ஒருவரென்றே அதுஎண்ணுகின்றது.

* * *

சுவாமிகள் ஏதோ ஒருவிதமாய்க் குருத்துவசாஸ்திரங்கள் படித்துவிட்டார். ஆனல், கடைசிவேளையிலே கைக்கெட்டியது வாய்க்கெட்டாத வாறாய்த் தமக்குக் குருப்பட்டம் தட்டுப்பட்டு விடுமோஎன்று அவர் தவியாய்த்தவிக்கும்படி செய்துவிட்டது அவரின் உடல்நலக்குறைவு. அதனல், குருமடத்துஅதிகாரிகள் அவருக்குக் குருப்பட்டம் அருளப்படாது குறுக்கேநின்றார்கள். என்றாலும் மேற்றிராணியாண்டவரின் தயவாலே அவர் ஒருவாறு குருப்பட்டம் பெற்றுவிட்டார். எத்தனைநாளைக்கு உயிர்வாழ்ந்து இவர் பூசைசெய்யப்போகிறாரென்று அப்போதுசொன்னவர்கள் இப்போதுஇருந்தால் ... இன்னமுமே அவர் உயிர்வாழ்ந்து பூசைசெய்கிறாரென அறியவந்தால் ... என்னே! கனவில் கண்டதெல்லாம் கைகூடுமா? நினைவில் நினைத்ததெல்லாம் நிறைவேறுமா? சுவாமிகளுக்கும் பல்லாண்டு!

## நல்லூர் மீசாம்

### நாம்கண்டதும் கேட்டதும்

**தண்ணீர்ப் பஞ்சம்**—முகமாலையிலே அர்ச். பிலோமினம்மாள் பேராலுள்ளதிருப்பதி இற்றைக்கு ஏறக்குறைய இருபதுவருடங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதுபெரிய திருநாளில் 200 அல்லது 300 பேர் மாத்திரம பங்குபற்றுவார்கள். ஒருசிறியகொட்டிற்கோவிலும், ஒருசின்னஞ்சிறியகிணறும் அங்குவரும் யாத்திரிகருக்குப் போதியனவாயிருந்தன. வருடாவருடம் யாத்திரிகரின்தொகை அதிகரிக்க, கிணறுகளையும் ஒவ்வொன்று ஒவ்வொன்ருகக் கூட்டினேம். தற்போது ஐந்துபெரியகிணறுகள் உண்டு. ஆயினும்இவ்வருடம் 10,000பேருக்கும், 12,000பேருக்கும் இடைப்பட்டதொகையானயாத்திரிகர்கள் ஒன்றுகூடியதின்நிமித்தம் தண்ணீர்மிகவும் அருந்தலாய்ப் போய்விட்டது. திருநாளன்று பின்னேரம் சட்டுச்சாதம் கொண்டுவந்தவர்கள் சாப்பாட்டுக்குப்பின் குடிப்பதற்குத்தானும் தண்ணீர் பெற்றுக்கொள்ள முடியாமற்போனார்கள். இந்தக்கஷ்டத்தை அடுத்ததிருநாளுக்குமுன் எதுவிதமும் நிவிர்த்தியாக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

சென்றவருடம் கொழும்புத்துறைச் சாதனகலாசாலையில் ஆசிரியத்தொண்டாற்றும் பண்டிதர் யோசேப்புஅவர்கள் தம்முடையபொறுப்பிலே ஓர் கிணறுவெட்டி உபகரித்தனர். இவ்விதம் அர்ச். பிலோமினம்மாளின் பக்தர்கள் எமக்குஉதவிசெய்ய முன்வரமாட்டார்களா?

எமதுகோவில்வளவுக்குப் பக்கத்தில் ஓர்சிறு குளமுண்டு. அந்தக் குளக்கரையில் ஓர்கிணறு வெட்டுவித்தால் பெரும்உதவியாயிருக்கும் என்றனர் சிலர். மணற்கண்டமாய் இருப்பதால் எத்தனைகிணறுகள்வெட்டினலும் தண்ணீர் கலங்கியேபோகும்; கடைசிநேரத்தில் சேறும் தண்ணீருமாகத்தான் பருகவேண்டிவரும்; இரண்டொருதாங்கிகள் அமைத்து, அவற்றிலே மழைத்தண்ணீரைச் சேகரிக்கமுடியாதோ வென்றனர் வேறுசிலர். இன்னுஞ்சிலர் தாங்கிகள்அமைத்துப் பிறவிடங்களிலிருந்து தண்ணீர்கொண்டுவந்து அவற்றைநிரப்பிவைக்க முடியாதோ என்றனர். பின்னுஞ்சிலர் ஓர் தண்ணீர்ப்பந்தல் வெகுஉதவியாய் இருக்கும்என்றனர். நாம் இவைஒன்றிற்கும் ஓர்முடிவும் சொல்லமுடியாமல் இருக்கிறோம். அர்ச். பிலோமினம்மாளின்பக்தர்கள், யாத்திரிகர்கள், உபகாரிகள் எதைச்செய்ய உதவிசெய்கிறார்களோ அதையேசெய்ய நாம் பனமாய் இருக்கிறோம்.

**விடுதிவசதிகள்**—எற்கனவே யாத்திரிகர்கள் ஒருங்குகூடத் தொடங்கிவிட்டனர். இங்குள்ள பெரியமரங்களின்கீழ் விடுதிவிட்டனர். வெயில் வெக்கை மிகவுங்கடூரமாய் இருந்தது. சிலர் கனப்பான கப்பல்பாய்கள் கொண்டுவந்து தங்கள்விடுதிகளை வசதிப்படுத்திக்கொண்டனர். மற்றவர்கள் வெயிலின்கொடூரத்தைச் சகித்த தன்மையைக்கண்டு அவர்களை மெச்சுகிறோம். சிலர் மருதமடுவிலும், இன்னும்வேறு யாத்திரைஸ்தலங்களிலும்போல விடுதிவீடுகள் ஆயத்தஞ்செய்து கொடுக்க முடியாதோஎன்றனர். அவ்விதவிடுதிகள் தேவைப்படுவோர் ஏற்கனவே அவற்றிற்குரியசெலவை அனுப்பி உதவியைக்கேட்டால் நாம் அவர்களுக்கு வேண்டியனசெய்து கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

**ஞானஆயத்தம்**—சரீர சம்பந்தமான ஆயத்தங்கள் போதியதிருப்திகரமாய் இருந்தனவென்று எல்லோரும் சொன்னர்கள். ஆனல், எல்லோர் மனதையும் கவர்ந்துகொண்டவைகள் இவ்வருடம்கிடைத்தஞானவசதிகளே. காலையிலும்மாலையிலும் சமயோசிதமான பிரசங்கங்களுடன் ஒவ்வொருநாளும் காலை 9 மணிக்குத்திருமணித்தியாலம் நடைபெற்றது. இந்தநேரம் சமையல்வேலைகளை ஆரம்பிக்கும் நேரமாய்இருந்தாலும் இப்பத்திமுயற்சியில் பங்குபற்றக்கூடியவர்கள் எல்லோருமே பங்குபற்றினர்கள். சாயந்தரம் 4-30 மணிக்குச் சிலுவைப்பாதையும் திருப்பண்ட ஆசீர்வாதமும் நடைபெற்றுவந்தன. கடைசிநாளன்று வண. மதுரநாயகம்சுவாமியவர்கள்ஒலிபரப்பிமூலம் சிலுவைப்பாதையை வழிநடத்தவே, கோவில்வளவின் எப்பாகத்திலும் எள்ளிடவிடமின்றித் தேங்கிநின்ற பக்தர்கள் முழந்தாட்படியிட்டுப் பயபக்தியுடன் எமதுதிவ்வியஇரட்சகரின் திருப்பாடுகளைத் தியானித்தவிதத்தைக் கண்டவர்கள் என்றும் மறப்பரோ?

இத்திருப்பதியில் செபத்துக்கோ ஓய்விருக்கவில்லை. நாள்முழுவதும் எந்தநேரமும் செபமாலை ஓதியவண்ணமே இருந்தார்கள். வேஸ்பர் ஆராதனை முடிந்ததும் சென்றவருடத்திலும் பார்க்கக் கூடியவிமரிசையாய் இராஆராதனை நடைபெற்றுவந்தது.

**பிலோமினம்மாளின் றேசாமலர்கள்**—பிள்ளைக்குவயசு இப்போது ஏழு. இரண்டுவருடங்களுக்குமுன் இப்பதிக்குவந்தபோது அம்மாவென்று தானும் உச்சரிக்கவியலாது இருந்ததாம். சென்றவருடம் இப்பதியிலே தான் முதன்முதல் அம்மாவென்று உச்சரித்ததாம். இவ்வருடம் மறுபிள்ளைகளைப்போல் சுலபமாகப்பேசக்கூடியதாய் இருந்தது.

இன்னொருவர் வயிற்றுவலியால் மிகவும் உபத்திரவப்பட்டவர். சென்றவருடம் திருநாளுக்குவந்தபோது அர்ச். பிலோமினம்மாளுக்கு ஓர் நேர்த்திவைத்தாராம். அன்றுதொட்டு வயிற்றுவலியுமில்லை, நன்மனமாக எதையும் சாப்பிடக்கூடியதாயும்இருக்கிறதென்றார். அநேகர் எட்டு, பத்து, பதினைந்துவருடங்களாகத் தவருது இப்பதியில் சிலநாட்கள் விடுதிவிட்டு நன்றித்துதி செலுத்திவருகிறார்கள். காரணம் "பிலோமினம்மாள் எங்களுக்கு அவ்வளவுநன்மைகள் செய்கிறாள்" என்பதே.

ஓடர் அனுப்புவது:

Sub-Post office,
NALLUR.

விலாசம்:

Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

### நன்றியறிந்த தோத்திரம்

சென்ற மார்கழிமாதம் தொடக்கம் எனக்கு உண்டாயிருந்த வாதநோயால் நடக்கமுடியாது பொல்லூன்றித்திரிந்தயான் அநேக வைத்தியசிகிச்சைசெய்தும் குணப்படாததுகண்டு அர்ச். காணிக்கை மாதாவிடமும், பெரியகட்டு அர்ச். அந்தோனியாரிடமும் மன்றாடி நேர்த்தி செய்து, பெரியகட்டு அர்ச். அந்தோனியார்அலயத்துக்கு இந்தமாதம் 1-ந் திகதி யாத்திரைசென்றதும், அவ்வாலயத்திற்தானே பொல் ஊன்றுமல் நடக்கக்கூடியவனுனேன். இன்னும் முழுச்சுகம்பெற அருள்செய்யுமாறு அவர்களை மன்றாடுகிறேன்.

எஸ். என். எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## யுத்தநிறுத்தப் பேச்சுகள்

— நியூயோக்

கோறியாப் போர்நிறுத்தப் பேச்சுகள்விஷயமாய் நியூயோக் ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுவது வருமாறு: "கம்யூனிஸ்தர்கள் இந்தப் போர்நிறுத்த விவாதம்முழுவதையுமே பிரசாரத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்களே தவிர, சமாதானம் ஏற்படவேண்டும் என்றசித்தை அவர்களுக்குத் துளிகூட இல்லை. ஐ. நா. தூதுக்கோஷ்டிக்கும், கம்யூனிஸ்ததூதுக்கோஷ்டிக்கும் இதுதான் அடிப்படைவேறுபாடு. யுத்தத்தைத்தடுக்க வழியிருந்தால் அதை முயற்சிக்காமல் விடுவானேன் என்ற மனப்பூர்வமான நல்லெண்ணத்துடன் ஐ. நா. தூதுக்கோஷ்டி இப்பேச்சுக்களில்பங்குகொண்டது. அந்த மாதிரி நல்லெண்ணம் கம்யூனிஸ்தர்களுக்கு இல்லவேஇல்லை. இருக்கவும் முடியாது. ரூஷிய பிரதிநிதியான மாலிக் தனது "சமாதானயோசனை"யை முதலில் கிளப்பிவிட்டாரே! அவர் என்ன எண்ணத்துடன் அப்படிச் செய்தார்? கம்யூனிஸ்தர்கள் சமாதானம்விரும்புகிறார்கள் என்ற எண்ணத்தாலா? அல்லது போர்நிறுத்தப் பேச்சு என்று திரைபோட்டுவிட்டு, திரைக்குப்பின்னே படைப்பலத்தைப் புதுப்பிக்க அவகாசம்தேடும் எண்ணத்தோடா? மற்றொருகாரணத்திற்காகவும் இருக்கலாம். அதாவது யுத்தத்தில்இறங்காமல் முக்கிய இராஜீய அனுகூலங்களை வாயடி அடித்துப் பெறும்எண்ணத்தோடும் இருக்கலாம். 38-வது சமாந்தரரேகையைப் போர்நிறுத்த எல்லையாக்கும்படி கம்யூனிஸ்தர்கள் பிடிவாதம்செய்தது இதற்கோர் உதாரணம். அதாவது இதைவைத்துக்கொண்டு கோறியாவைத் துண்டாக்குவதற்கு "வாக்குறுதி"யாகத் திரித்துவிடலாம்என்ற எண்ணந்தான் அவர்களுக்கு."

## கம்யூனிஸ்தர்களின் சதிமுயற்சி

— வாஷிங்ரன்

ஆள்கூட்டம்போட்டு அனைவரையும் மனதைக்கலைத்து வளைத்துக் கட்டும் தந்திரத்தின் "தந்தையர்" நாஸிகள். அந்தவித்தையை இன்னும் செம்மையாக்கிக் கையாண்டுவருகின்றனர் கம்யூனிஸ்தர்கள். தற்போது பேர்ளினிலே (கிழக்குப்பகுதியில்) நடக்கும் "வாலிபர்விழா" இதற்கு ஒருகண்கண்ட அத்தாட்சி. இவ்வாறு அமெரிக்க அரசாங்க ஜேர்மன் கருமநிர்வாகியான ஹென்றி பைறேட் கருதுகின்றார். மேலும்அவர் கூறுவதாவது: "கிழக்குப்பேர்ளினிலிருந்து எண்ணமுடியாத கம்யூனிஸ்தவாலிபர்கள் சுதந்திரக்காற்றைச்சுவாசிக்க மேற்குப் பேர்ளினுக்குப் பிய்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இரும்புத்திரைக்குப் பின்னிருந்து ஒரேநாளில்மட்டும் இம்மாதிரி 70,000 பேர் வந்திருக்கிறார்கள். இந்தநிலைமையைக் கம்யூனிஸ்த அதிகாரிகள் எதிர்பார்க்கவில்லை." கிழக்குப்பேர்ளின் "விழா"எதற்கு? வாலிபர்களுக்குள்ள இயற்கையான உற்சாகத்தையும், உணர்ச்சி வேகத்தையும் கட்சிநலன்களுக்கு—அதாவது சோவியற்எதேச்சாதிகார விஸ்தரிப்பிற்குப் பயன்படுத்திக்கொள்ளவே இந்தக் கோலாகலங்கள். கிழக்குப் பேர்ளினில் வாலிபர்கள் நிர்ப்பந்தத்தில் உழல்கிறார்கள். அதற்குமாறாக, மேற்குப் பேர்ளினில், 35 லட்சத்திற்கு மேற்பட்டஜேர்மன் இளைஞர்கள் சுயேச்சையாக ஒன்றுதிரண்டு தேசநலனைவளர்க்கப் பாடுபட்டுவருகின்றார்கள். இதைப் பிரத்தியட்சமாக விளக்கிக்காட்டப் புரட்டாசி 5—30 தேதிகளில் மேற்குப்பேர்ளின்அதிகாரிகள் விழா ஒன்றுக்கு ஏற்பாடுசெய்துள்ளார்கள்."

## நீதியான சமாதானம்

— வாஷிங்ரன்

சான்பிரான்சிஸ்கோவிலே கைச்சாத்திடப்படவிருக்கும் யப்பானிய சமாதானஉடன்படிக்கைமூலம் யப்பானுக்குக் கூடியசீக்கிரம் நீதியான சமாதானம் கிட்டிவிடுமென்று யப்பானிலுள்ள நேசநாடுகளின் சர்வசேனாதிபதியான ஜெனறல் றிட்ஜ்வே அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். "யப்பானிய சமாதான கல்உடன்படிக்கையைப் பிரசுரித்ததானது, யப்பானுக்குச் சுயஆதிபத்தியம் வழங்கி, உலகின் ஏனைய நாடுகளுடன் சமஅந்தஸ்து அளிக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகளில் முக்கியமான ஓர் கட்டத்தைக்குறிக்கிறது. உடன்படிக்கையின் அமசங்கள் எனக்கு மிகவும்திருப்தி அளித்துள்ளன. பண்டைப் புகழ் படைத்த யப்பானியமக்களின் ஆற்றலும், திறனும் உலகறிந்தவொன்றாகும். எததகைய இலட்சியங்களுக்காகச் சுதந்திரஉலகம் இன்று முனைந்து உழைத்துவருகின்றனவோ, அந்த இலட்சியங்களுச்காகவே யப்பானும் எதிர்காலத்தில் உழைக்குமென்று நம்புகிறேன்."

## கோறிய நிவாரணம்

— நியூயோக்

கோறியாவில் புனர்நிர்மாணவேலை திருந்தச்செய்யப்படுமானால் அதுவே ஆசியாவில் கம்யூனிஸத்திற்குத் தகுந்த பதிலாகிவிடுமென்று ஐ. நா. கோறிய புனர்நிர்மாணதலைவர் ஜெனறல் ஜே. டோனால்ட் கிங்ஸ்லி கூறுகிறார். "கீழ்க்கோடியில் குடியேற்றநாட்டு ஆட்சிமுறைமறைந்ததும் அதன் இடத்தில் கம்யூனிஸம்வியாபித்துவிட்டது. குடியேற்றநாட்டு ஆட்சிமுறைச் சுரண்டலின்றிக் கீழ்க்கோடிப் பிரதேசத்தை அபிவிருத்திசெய்ய நாம் வழிகாணக்கூடுமானால் அங்கு கம்யூனிஸத்திற்கே இடமில்லாதபடி செய்துவிடலாம். வடகோறியாவிலிருந்து அகதிகள் தென்கோறியாவிற்குள் வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த அகதிகள் அதிகம் உடல்நலிவுற்றிருந்தனர். வடகோறியாவில் உணவுப்பொருள் அநேகமாகப் பூச்சியமாகிவிட்டது. உலகின் நெருக்கடிப்பிரதேசங்களில் கோறியாவும் ஒன்றாக விளங்குகிறது. அதனைக் 'கீழ்க்கோடியின் மேற்குப்பேர்ளின்' என்று குறிப்பிடலாம். கீழ்க்கோடியில் கம்யூனிஸத்தைஎதிர்க்கும் முன்னணி என்ற முறையில் கோறியாவானது ஆசியாவின் பெரும்பகுதியின் வருங்காலத்தை நிர்ணயிக்கும்"என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## பசிபிக் உடன்படிக்கை

— வாஷிங்ரன்

புரட்டாசிமாதம் முதல்தேதியன்று சான்பிரான்சிஸ்கோவில் பசிபிக் பாதுகாப்பு உடன்படிக்கையில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா ஆகிய மூன்று அரசாங்கங்களும் கையொப்பமிடுமென்று இராசாங்கபகுதிஅறிவித்திருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் கண்டிருப்பதாவது: "இந்த உடன்பாட்டுநகலில் கடந்தஆடிமாதம் 12-ந் தேதியே வாஷிங்ரனில் மூன்று அரசாங்கங்களும் கையொப்பமிட்டன. கடந்த சித்திரைமாதம் 18-ந் தேதியன்று ஜனாதிபதிட்றூமன் தமது அறிக்கையில் குறிப்பிட்டதுபோல், மூன்று அரசாங்கங்களிடையேயும் ஏற்பட்ட இந்தஉடன்பாடு பசிபிக்கில் சமாதானத்தைப் பலப்படுத்தும்திட்டங்களில் ஒன்றாகும். இந்த உடன்பாட்டின்முகவுரையும், எட்டாவதுவிதியும் குறிப்பிடுவதுபோல் பசிபிக் பிரதேசத்தில் அதிகவிரிவான பாதுகாப்பு முறையொன்றை உருவாக்க வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்படும்."

(யூஸிஸ்)

# 100 ஆண்டு இயக்கம்

(முன்தொடர்ச்சி)

இத்தருணத்தில் வத்திக்கான் பொதுச் சங்கமொன்று 1869—1870-இல் கூடியது. இச்சங்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட மேற்றிராணிமார்களும், வேதசாஸ்திரத்தில் நிபுணர்களாகவிளங்கிய முன்சொன்ன வக்காரி சுவாமியாரும், ரெமிஜியோ, புசெல்லி என்பவர்களும் தேவ அன்னையின் மோட்சஆரோபண இயக்கத்தைப்பற்றிப் பேசினர். ஏராளமான கருதினால்மார்களும், அதிமேற்றிராணிமார்களும், பிதாப்பிதாக்களும் இதைஆதரித்து அவர்களுக்குத் தேவையான உதவியுமளித்தனர். 1879-ம் ஆண்டு வக்காரிசுவாமியார் தெள்ளியநடையில் கடிதங்கள்பலவரைந்து இவ்விஷயத்தைச் சகலவிசுவாசிகளுக்கும் அறிவுறுத்தினார்.

1900-இல் பிரான்ஸ்தேசத்தில் இவ்வியக்கம் செழித்தோங்கியது. அந்நாட்டினின்று அது ஸ்பெயினிலும், அமெரிக்க, ஆசியநாடுகளிலும் காட்டுத்தீபோல்பரவியது. இதற்கெல்லாம் ஷிடோன்என்ற பிரான்சிய குருவானவரின் சாமர்த்தியமும், ஊக்கமும், உற்சாகமுமேகாரணமாகும். மறுபடியும் 'மடேர்னிஸ்ற்'என்ற நவீன கோஷ்டியினர் 1902—1904 வரை இந்தஇயக்கத்துக்குவிரோதமாகப் பறைசாற்றித் தீங்கிழைத்தனர். ஆனால் சீக்கிரத்தில் அவர்களுடையகொட்டம் அடக்கப்பட்டது. அன்னையின் ஆரோபண இயக்கம் வெற்றிக்கொடிநாட்டியது.

19-ம் நூற்றாண்டின் இறுதியிலே லண்டன்மாநகரில் மூன்றுசங்கங்கள் நடைபெற்றன. சங்கங்களின் கடைசி நாளில் கருதினால்மார்கள், அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள், குருமார்பலர் ஒன்றுசேர்ந்து ஏராளமான கையொப்பங்கள்அடங்கிய ஓர் விண்ணப்பத்தை றோமைக்கனுப்பினர். ஸ்பெயின்நாட்டில் ஹிஸ்பாலி அதிமேற்றிராணியார் 73,000 கையொப்பங்கள் அடங்கிய ஒருவிண்ணப்பத்தை றோமைக்குஅனுப்பினார். அமெரிக்காவில் பல மேற்றிராசனங்களினின்றும் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. திலாஸ்காலன்ஸ் மேற்றிராசனத்தினின்று 25,000 குருமாருடையவும், விசுவாசிகளுடையவும் கையொப்பங்கள் றோமையில்போய்க்குவிந்தன.

1906-ம்ஆண்டிலிருந்து 1913 வரை ஸ்பெயின், ஆஸ்திரியா, ஜேர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளில் மரியாயின் சர்வதேசமகாநாடுகள் (Marian International Congress) நடைபெற்றன. அம்மகாநாடுகள்யாவும் இச்சத்தியத்தை விசுவாசசத்தியமாகப் பிரகடனம்செய்யவேண்டுமென்று தங்கள் விருப்பத்தையும் றோமைக்குத் தெரிவித்தன. அப்பொழுது ஸ்பெயினில் கையொப்பமிட்டவர்களுடைய எண்ணிக்கை 2,50,000.

1914 முதல் 18 வரையில் ஏற்பட்ட முதலாவது உலகமகாயுத்தம் காரணமாக, அதுவரை ஓங்கிச்செழித்துவந்த இயக்கத்தின்வளர்ச்சிக்குச் சிறிது தடை ஏற்பட்டது. எனினும் யுத்தகாலத்திலும் இத்தாலியிலே 1916-இல் கிலினே-கிறேஸ்டா என்பவரும், பிரான்சிலே 1918-இல் புருசோல் என்பவரும் முறையே "லசுந்தா" (L'Assunta) "லசும்ஸியோன்" (L'Assumption) என்ற பத்திரிகைகளைப் பிரசுரஞ்செய்து இயக்கத்தின் உணர்ச்சிகுன்றாதிருக்க உழைத்தனர்.

சல்வாதோர்என்ற யேசுசபைக் குருவானவர் 1923-இல் ஸ்பெயினிலே அவ்வியக்கத்தை நன்குஸ்தாபித்தார். பின்னர் 1914 முதல் 25 வரையிலே கனடா, பிலிப்பைன்ஸ், இந்தியா, சீனா முதலிய இதரதேசங்களிலும் பரப்பினர். யேசுவின் திருஇருதயப் பக்தியை உலகில்ஸ்தாபிப்பதில் அதிமிக ஆர்வங்காட்டுகின்ற மத்தேயுஸ் - கிராவி சுவாமியாரும் 1932-ம் 1933-ம் வருடங்களில் பலநாடுகளுக்குச்சென்று தேவஅன்னையின் மோட்சாரோபண வேதசத்தியத்திற்குச் சார்பாக 5,00,000-க்குமேலாகக் கையொப்பங்களைச் சேகரித்து, அவற்றை றோமைக்கு அனுப்பினார்.

எனவே, இந்தஇயக்கத்தை விசேஷவிதமாய்க் கண்காணித்து, ஆதரித்துக் கீர்த்திபெற்றநாடுகளாக விளங்குவன லத்தீன்-அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி எனும் மூன்றுமேயாகும். இதற்கென்றே பெரும்பாடுபட்டு அதை எங்கும் பரப்புவதற்கெனத் தமது உடல், பொருள், ஆவியை அர்ப்பணஞ்செய்து உழைத்தவர்கள்: பெயாதுஸ்கிளாறெட், துஸ்மெத், பொனோஸி முதலிய மேற்றிராணிமார்களும், வத்திக்கான்சங்கத்திற்குப்பின் 1871-இல் மேற்றிராணியாரான வக்காரி என்பவரும், கிறேஸ்டா, புருசோல், ஷடேன், கிராலி, மற்றுமுள்ள எண்ணிறந்த குருப்பிரசாதிகளுமே. 1863 முதல் 1940 வரை இவ்வேதசத்தியத்தை விளம்பரப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு: சுமார் 3,000 மேற்றிராணிமார்களும், 80,000 குருப்பிரசாதிகளும், 80,06,000 விசுவாசிகளுமாவர்.

கடைசியாக 1945 முதல் 1950 வரை இவ்வேதசத்தியத்திற்குச் சார்பாகஏற்பட்ட சம்பவங்கள் நம்மை அகமகிழச்செய்கின்றன. ஏனெனில், ஆஸ்திரியா, யூகோசிலேவியா, போலாந்து, சுவிற்சர்லாந்து, ஹங்கேரி முதலியநாடுகளிலும், ஜேர்மனி, அமெரிக்கா, பெல்ஜியம், ஒல்லாந்து முதலிய தேசங்களிலும்உள்ள அரசாங்க பொதுச்சர்வகலாசாலைகளும், கல்லூரிகளும் இவ்வேதசத்தியத்திற்காக விண்ணப்பங்களை அனுப்புவதில் உற்சாகம் காட்டின. இதுவரைக்கும்கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 80,00,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கத்தோலிக்கஉலகம் இவ்விதம் ஆவலுற்றிருப்பதைக்கண்ட நம் பரிசுத்த தந்தை 12-ம் பத்திநாதர் 1946-ம் வருடம் வைகாசிமாதம் 12-ந் தேதி உலகின் சகல மேற்றிராணிமார்களுக்கும் "Deiparae Virginis" என்ற தலையங்கத்தின்கீழ் ஒரு சுற்றறிக்கை அனுப்பி, இச்சத்தியத்தைப் பிரகடனம்செய்தல் நல்லதா, சமயோசிதமா என்பதைப்பற்றித் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டார். உலகிலுள்ள மேற்றிராணிமார்களில் 1,191 பேர் (94%) பதிலளித்தனர். இவர்களில் 1,169 பேர் (98%) ஆமென்றுகூற, 22 பேர்மட்டும் இது தகுந்தகாலமல்ல எனத் தெரிவித்தனர். பின்னவரில் 6 பேர்மட்டும் இச்சத்தியத்தையிட்டுச் சந்தேகித்தனர்.

இவற்றையெல்லாம் ஆற அமர ஆராய்ந்து தமக்குக் கொடுக்கப்பட்ட தவறாவரத்தைக்கொண்டு, புனிதவருடமாகிய 1950-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1-ந் தேதி நூற்றுக்கணக்கான மேற்றிராணிமார்களும், குருப்பிரசாதிகளும், பல்லாயிரக்கணக்கான விசுவாசிகளும் அர்ச். இராயப்பர் தேவாலய மைதானத்தில் குழுமியிருக்க "மகா பரிசுத்த தேவஅன்னை இவ்வுலகவாழ்வின்பின் தமதுஆத்தும சரீரத்தோடு பரலோகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டாள் என்னும்சத்தியம், சர்வேசுரனால்வெளிப்படுத்தப்பட்ட சத்தியமென"த் தெரிவித்தார் நமதுமேய்ப்பர் 12-ம் பத்திநாதர்.

மோட்சத்திற்கு ஆரோபணமான இராக்கினி நம்மெல்லோரையும் ஆசீர்வதிப்பாராக.

**A. P. Doss**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவர்த்தமானம்

## கடவுளைத் தள்ளிவிட்டோம்

சிலகாலத்தின்முன் இத்தாலிய பொதுத்தேர்தலிலே வெற்றியடையுமாறு கம்யூனிஸ்தர்கள் முயன்றுகொண்டிருந்தபோது உன்மத்தங்கொண்ட கம்யூனிஸ்தன் ஒருவன் அங்கு ரோமக்னபகுதியிலுள்ள சிறிய கிராமம் ஒன்றைச்சேர்ந்த குருவானவர்ஒருவரைநோக்கி, "எங்களுடன் போர்பொருதுவதில் யாதாமோர் பலனும் வரப்போவதில்லை. சமயம்என்பது முடிவுகண்டுவிட்டது. கம்யூனிஸ்தராகிய நாங்கள் கடவுளைத் தள்ளிவிட்டோம்" எனக்கூறினான். அப்போது குருவானவர், "என்மகனே! நீங்கள் அதிர்ஷ்டசாலிகளே. கடவுள் இன்னும்அதிகம் பொறுதியாய் இருக்கிறாரேயென்று நீங்கள்அவருக்கு நன்றி சொல்லுங்கள்" என்று சாந்தமாக மொழிந்தார்.

## உலகயூதர்களின்மகாநாடு

உலகயூதர்களின் 23-வது மகாநாடு இம்மாசம் 13-ந்திகதி ஜெருசலேம் நகரில் ஆரம்பமானபோது, பலநாடுகளிலுமிருந்துபோன 480 யூதப்பிரதிநிதிகள் சமூகமாயிருந்தார்கள். இம்மகாநாடு ஜெருசலேம்நகரில் கூடியது இதுவேமுதன்முறையாகும், அவ்வேளை இஸ்ருயேல்நாட்டின் பிரதமரான திரு. டேவிற்பென்-கூறியன் எழுபது நிமிஷநேரமாக நிகழ்த்திய பேச்சிலே குறிப்பிட்டதுவருமாறு: யூதசனங்களால் கொடுபடும் உதவியிலேயே இஸ்ருயேலின்சேமம் தங்கியிருக்கின்றது. இற்றைக்கு மூன்று வருடங்களின்முன்னர்நடந்த யூத-அராபிய யுத்தத்தில் இஸ்ருயேல் சேனை வெற்றிகொண்டது. ஆனால், அந்தயுத்தம் தீர்க்கமான அல்லது முடிவானதல்ல. ஏனெனில், நாங்கள் இன்னுமே சத்துராதிகளால் சூழப்பட்டிருக்கிறோம்.

## பிழைப்பற்ற யப்பானியர்கள்

யப்பானிலே பொருளாதார மனக்குறை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. அங்கே 3 லட்சத்துத் 90 ஆயிரம் யப்பானியர் பிழைப்பற்றவர்களாய் அரசாங்கஉதவி பெற்றுவருகின்றார்கள் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது. ஆயினும்உள்ளபடியே குறைந்தபட்சம் 20 லட்சம்யப்பானியர் பிழைப்புக்கண்டுகொள்ளமுடியாது தங்கள் இனசனரின் சகாயத்தைப்பெற்றுச் சீவியம் நடத்திவருவதாக மதிப்பிடப்படுகிறது. அங்ஙனமாக, கோறிய யுத்தமும் ஒருமுடிபுக்குவருமானால், ஐக்கியநாடுகளின் யுத்தமுயற்சிசம்பந்தமான தொழிற்சாலைகளில் வேலைசெய்துவருகின்ற பெருந்தொகையான யப்பானியர்கள் விடப்பட்டு வேலையில்லாத்திண்டாட்டம் மேலும் அதிகரிக்குமென்றஅச்சம் எழுந்திருக்கிறது.

## சமாதானசெய்திப் பலூன்கள்

ஐரோப்பாவிலும், லத்தீன்அமெரிக்காவிலும், கனடாவிலும், அமெரிக்க ஐக்கியதேசத்திலும் கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடிவரும் ஸ்தாபனங்களின் ஆதரவைப்பெற்ற "சுதந்திர காற்றுகள்" இப்போது கம்யூனிஸ்தநாடுகளில் ஒன்றாகிய செக்கோசிலவாகியாவில் வீசத்தொடங்கியிருக்கின்றன. அதாவது 35 லட்சத்துக்கு மேற்பட்ட சமாதான-சிநேகபான்மைச் செய்திகளைக்கொண்ட மூவாயிரம்பலூன்கள் பவேரியாவிலுள்ள அந்தரங்கமான ஓர்இடத்திலிருந்து சென்ற 16-ந்திகதியன்று செக்கோசிலவாகியாவைநோக்கி மிதக்கவிடப்படலாயின. பென்சில்வேனிய சர்வகலாசாலைஅதிபரான திரு. ஹறல்ட் ஸ்ராசென்அவர்கள் முந்திய திங்கட்கிழமை அடையாளங் கொடுத்தபோதுதான் அந்நாட்டுக்குச் சுதந்திர செய்திகளுடன்கூடிய பலூன்கள் முந்தமுந்த அனுப்பப்படலாயின.

# மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! ஆடம்பரமும், அட்டகாசமுமான பேச்சுகள் ஓர்போதுமே நாட்டை நன்குமுன்னேறச் செய்யாவாம். தயைபொதிந்த இன்சொற்களே நாட்டுக்கு நற்பணியாற்றும் கேடயங்கள் ஆகுமாம். இந்தநல்லபண்பு தற்போதைய அடம்பன்கட்டளைக் குரவரிலே பொலிந்துகாணப்படுவது சந்தோஷந் தருவதாகும். இவர்சமயதொண்டில் மாத்திரமல்ல, கிராமப்புனருத்தாரணதொண்டிலும் சிறப்பாக ஈடுபட்டு வருவது பாராட்டத்தக்கதாகும். சில அரசிறைக்காரியாலயங்களில் தொண்டாற்றும் தொழிலாளிகளின் செயலானது தெய்வம்விடைகொடுத்தாலும் பூசாரிவிடைகொடாததுபோன்றுதான் இருக்கின்றதாம். இஃதுஅற்ப அறிவின்பயனான அகந்தையின் செயலேஅல்லாது ஆழமான அறிவினாலும் அனுபவஞானத்தாலும் நடக்கும் செயல் அல்லவாம். இதையெல்லாம் தூதன் நாட்டுநன்மையைக் கோரியே வெளிவிடுகின்றானும்.

**மனவருத்தமான செயல்**—சமீபத்திலே யாழ்நகரில் சொல்லருஞ் சிறப்புடன் நடைபெற்ற தமிழ்விழாவைப்பற்றி அறியாதார் இல்லையென்றே சொல்லலாம். ஆனால், அதன் ஞாபகமாக நல்லமுறையில் வெளியான **தமிழ்விழாமலரில்** பெரிய தமிழ் மேதாவியும், சொற்கலைப் புலவரெனும் சிறப்புப்பெயர் தாங்கியவருமான நல்லூர், வண. சுவாமி. ஞானப்பிரகாசர்அவர்களின் உருவப்படம் ஒன்று இல்லாமறபோயினமை சொல்லருந்துயரைத் தருவதாகும். ஓர் காலத்தில் ஜேர்மானியதேச தபால் முத்திரைகளில்தானும் அவர்சிரஉருவம் பொறிக்கப்பட்டிருக்க, எம்தமிழ்நாட்டுவிழாமலரில் இத்தமிழ்ப்பெரியாரின்உருவம் இடம்பெறுமற்போயினமை பெரியமன வருத்தமென்றே இங்குள்ள தமிழ்அபிமானிகள் பேசிக்கொள்ளுகின்றனராம்.

**உணவமந்திரியார்**—உணவு-கூட்டுறவு மந்திரியாரான திரு. ஏ. இரத்நாபகாஅவர்கள் சென்றமாசம் 28-ந்திகதி மன்னாருக்கும், அடம்பன், உயிலங்குளம்முதலாம் இடங்களுக்கும் விஜயஞ்செய்தனர். இவர் கூட்டுறவுப் பகுதியாரால் நன்குவரவேற்கப்பெற்று மன்னார்க் கமத்தொழிற்பொருட்காட்சியையும், பசுமாட்டுப்பண்ணையையும் திறந்துவைத்துத் திரும்பினர்.

**ஓர் குதூகலவிழா**—இம் மாசம் 17-ந்திகதி வெள்ளிவாரம் வங்காலை, அர்ச. அன்னம்மாள் ஆலயத்திலே மகாவந். மேற்றிராணியாண்டவரால் வண. A. பிரான்சீஸ் குலாஸ் விறதர் அவர்கள்குருப்பட்டாபிஷேகம்செய்யப்பெற்றமை பெரிதும் சந்தோஷத்தைத் தருவதாகும். இத்திருவைபவத்தையிட்டு வங்காலைவாசிகளிடையேமிகுந்த குதூகலமும், புத்துணர்ச்சியும காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இவர் வங்காலையைத் தமதுஜனனபதியாகக் கொண்டவர். அரிப்புக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு.ஏ. எம். குலாஸ்அவர்களின் சகோதரர். ஞானவளம்பொருந்திய வங்காலைப்பதியின் முதற்குருப்பிரசாதியும் இவரே.

**பெற்றார்தினவிழா**—கருங்கண்டல் கத்தோலிக்கபாடசாலையிலே சென்ற 9-ந்திகதிமாலை 7-30 மணியளவில் இதற்கென இடப்பட்டிருந்த பந்தரிலே அடம்பன் கட்டளைக்குரவர் வண. எஸ்.வேந்தர்கோன்சுவாமிகளின் தலைமையில் பெற்றார்தினவிழா விமரிசையாக நடைபெற்றது. அதற்குப் பெருந்தொகையானமக்கள் சமுகங்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்திலே படிப்பிலும், விளையாட்டிலும், வரவக்கிரமத்திலும் வெற்றிபெற்றமாணவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன. பின்னர் தலைமை ஆசிரியர் பி. எஸ். நீக்கிலஸ் அவர்களால் பாடசாலைஅறிக்கை வாசிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து தலைவர்சுவாமியவர்களாலும், பாப்பாமோட்டைக் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் பாடசாலைமாணவர்கள் நடத்திய ஆடல் பாடல்களுடனும், தலைமை ஆசிரியர் கூறிய நன்றியுரையுடனும் விழா முடிவெய்தியது.

## மணித்தியாலம் 490 மைல்

பிரித்தானியின் அதிவேகமான 'கமெற்-ஜெற்' பிரயாணவிமானம் வழமையானதிலும் அரைவாசிநேரத்திலே தனது பிரயாணத்தைத் தீவிரமாக நடத்தக்கூடியது. மணித்தியாலம் 490 மைல் வேகமுள்ள இந்தவிமானங்களில் ஒன்று பரீட்சார்த்தமாக நாளைவெள்ளிக்கிழமை லண்டனிலிருந்து புறப்பட்டுப் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் பறந்துவரவிருக்கிறது. இது கெய்றோவழியாகக் காராச்சிக்குவந்து அமிதபாத், டில்லி, அலகபாத், கல்கற்ரு, காராச்சி, பஸ்ரு, கெய்றோ, ரோம்வழியாகத் திரும்பலண்டனைப் போய்ச்சேரும். இந்தநவீன ஜெற் விமானங்கள் வருகிற 1952-ம் ஆண்டின்தொடக்கத்தில் லண்டன், றோம், கெய்றோநகர்களுக்கிடையில் கிரமமாகப் பிரயாணிகளை ஏற்றியிறக்கவிருக்கின்றன.

## மேற்றிராணியாண்டவரின் தரிசனை

தலைமன்னாரின் பாதுகாவலராம் அர்ச். லோறன்சியாரின்திருநாள் வழமைப்பிரகாரம் நிகழ்மதி 10-ந் திகதி சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. முந்திய திருவிழாக்கள் 1-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. திருநாளுக்குமுந்திய தினமாகிய 9-ந் திகதி பிற்பகல் கோயிலானது மாலைகளினாலும், மலர்களினாலும் அலங்கரிக்கப்பட்டுத்தேசோமயமாய்க் காட்சியளித்துநின்றது. மின்சார தீபங்கள் அதனழகைப் பன்மடங்கு சிறப்பித்தன. வீதிகள் துவசதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மாட்சியுடன்விளங்கின. கிராமமெங்கும் ஒரேகுதூகலம். அதற்குக் காரணம் எம்முதற் தமிழாயரவர்கள் எம்கிராமத்திற்குத் தரிசனமளிக்கவிருந்தமையே. ஆணகளும், பெணகளும், சிறுவர் சிறுமிகளுமாக ஐந்நூற்றுக்கதிகமானோர் கிராமத்தின்பிரதானசந்தியில் தங்கள் கட்டளைக்குரவர் வண. லெபோன் சுவாமியாருடனும், உதவிக்குரவர் வண. மொஞ்ஞே சுவாமியாருடனும் ஆண்டவரவர்களின் வரவை எதிர்பார்த்துநிற்கும்போது, அவர் மன்னார்ப்பகுதி மூப்புச்சுவாமியார் வண. பீற்றர்அவர்களுடனும், வண. பொமிக்கோ சுவாமியாருடனும மோட்டார்ரதாரூடராய் வந்திறங்கவே, கட்டளைக்குரவர்வரவேற்க, லோ. அருளப்புகூஞ்ஞஎன்பவர் மாலைசூட்டினர். பின்னர் பாண்ட்வாத்தியமிசைக்க, நிலபாவாடைமீது அவரைக் கோயிலுக்கு அழைத்துச்செல்ல, ஆங்கு அவர் தமதுஅட்'போஸ்தொலிக்க ஆசீர்வாதமளித்தனர். பின்னர் அவரை நடுநாயகமாகக்கொண்டு ஓர் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. பின்பு ஆண்டவரவர்கட்கு ஓர் பகிரங்கவரவேற்பு அளிக்கப்படலாயிற்று. அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த பாடசாலைமண்டபத்தின் உயர்மேடையிலே ஆயரவர்களுமம, குருமார்நால்வரும் அமர்ந்ததும், கோயிற்கட்டளைகாரரில் ஒருவரான ச. வெலிச்சோர் பீரிஸ்என்பவர் அவருக்கு மாலைசூட்டினர். பாடசாலைச்சிறுவர் வரவேற்புக்கீதங்கள் படித்தனர். கோயில்சக்கிறிஸ்தாம் ந்.

விக்றர் தலிமஎன்பவர் அழகிய ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். கோயிற்சிறாப்பர் ஆ. சந்தியா லெம்பேட்என்பவர் தெட்சணைவைத்துப்பணிந்தனர். ஆண்டவரவர்கள் தமக்குச்செய்த அனைத்திற்குமாக நன்றிகூறி, நன்மதியுரைத்து, ஆசீர்ந்தனர். பின்னர் இவ்வாலயத்திற்கெனத் தருவிக்கப்பட்ட பெரிய மணியொன்றை மந்திரித்து, அதை ஸ்தாபிக்கவிருக்கும் கோபுரத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். இரவு 8 மணியளவில் செபமாலை முடிவிலே வண. பீற்றர் சுவாமியவர்களால் அர்ச். லோறன்சியாரின் சீவியத்தைப்பற்றிச்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 16-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(லூக். 14:1—11)

அக்காலத்தில் சம்பவித்ததாவது: யேசுநாதர் ஓர் ஓய்வுநாளில் அப்பம்புசிக்கப் பரிசேயரின் தலைவனொருவனுடைய வீட்டுக்குப் போயிருந்தபோது, பரிசேயர்கள் அவரைப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதோ! அவருக்கு முன்பாக மகோதரவியாதியுள்ள ஓர் மனிதன் இருந்தான். யேசுநாதர் நீதிசாஸ்திரிகளுக்கும், பரிசேயருக்கும் எதிர்மொழியாக: ஓய்வுநாளில் நோய்களைப்போக்கலாமோவென்று கேட்டார். அவர்களோ மௌனமாயிருந்தார்கள். ஆகிலும் அவர் அவனைத்தொட்டுச் சௌக்கியப்படுத்தி அனுப்பிவிட்டு: தன் கழுதையாவது, எருதாவது கிணற்றில் விழுந்தால் ஓய்வுநாளாயினும் உடனே அதைத் தூக்கிவிடாதிருப்பவன் உங்களுக்குள் எவன்? என்று அவர்களைக் கேட்டார். இவைகளைக்குறித்து அவருக்கு மறுவுத்தாரஞ்சொல்ல அவர்களாற் கூடாமற்போயிற்று. அன்றியும், விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள்பந்தியில் முதன்மையான இடங்களை எப்படித்தெரிந்துகொண்டார்களென்று அவர் கவனித்து, அவர்களுக்கும் ஓர் உவமையைச்சொல்லி, அவர்களைநோக்கித்திருவுளம் பற்றினதாவது: நீ கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கும்போது முதலிடத்தில் உட்காரவேண்டாம்; ஏனெனில், ஓர்சமயம் உன்னிலும் கனம்பொருந்தியவன் அவனால் அழைக்கப்பட்டிருப்பான். உன்னையும், அவனையும் அழைத்தவன் வந்து: நீ இருக்கும் இடத்தைக்கொடுவென்று உனக்குச்சொல்வான். அப்போது நீ நாணத்துடனே கடைசியிடத்திற்குப் போகத் தொடங்குவாய். ஆனால், நீ அழைக்கப்பட்டிருக்கும்போது கடைசியிடத்தில் பந்தியில் உட்காரப்போ; அப்படிச்செய்தால் உன்னை அழைத்தவன் வரும்போது: சிநேகிதனே மேலிடத்திற்கு எழுந்து வாரும் என்று உனக்குச் சொல்லுவான்; அப்போது பந்தியிலிருப்பவர்கள் முன்னால் உனக்கு மகிமையாயிருக்கும். ஏனென்றால், தன்னைத்தான் உயர்த்துகிறஎவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 500. Eng.

## குயினைனும் சரித்திரமும்

புராதனஎகிப்தின் விசித்திரங்களிலே அநேகர் கவர்ச்சிகொண்டு மயங்கிப்போயிருந்தார்கள். நிலத்தை அகழ்ந்து நடத்திய ஆராய்ச்சிகளும், அங்குள்ள கூர்நுதிக்கோபுரங்களும், கடந்துபோன அக்காலத்திலே மனித வாழ்க்கைபற்றி அதிகமாக வெளியிட்டிருக்கின்றன. அக்காலத்திற்றானும் எல்லாம் பிரமாகவும், விளையாட்டாகவும் இருக்கவில்லை. சதுப்பான இந்த நாட்டிலே சுகாத்தியம் சுகத்துக்கு அதிகம் கேடாயிருந்தது. தேசிய கொள்ளைநோய்களில் ஒன்றான "காய்ச்ச"லைப்பற்றிப் பழையஏற்பாடு கூறுகின்றது.

புராதன கிரேக்கதேசமுமே மலேரியாவைப்பற்றிய நிரூபிக்கப்பெற்ற வரலாற்றை எழுத்திலே தந்திருக்கிறது. டபிள்யு. ஆர். எஸ். ஜோன்ஸ் என்பவர் 'மலேரியாவும், கிரேக்கசரித்திரமும்' என்ற தமது புத்தகத்திலே புராதன கிரேக்கநாகரீகம் குன்றியமை இவைகளாலேயே இருக்கவேண்டுமெனக் காரணங்கூறித் தமது விவாதத்தை ஆதரிக்கின்றார்.

ரோமின்வீழ்ச்சிக்குமே கொள்ளைக் காய்ச்சலின் அழிவுக்கேதுவான ஆற்றலே காரணமென்று சிலவேளைகளில் ஆரோபிக்கப்படுகிறது. ஆட்சேபஅச்சமில்லாமலே, யாதாமோர் சந்தேகமுமில்லாமலே சாதிக்கப்படமுடியுமென்றாலும் சங்கிலித்தொடரான வத்திக்கான் குன்றுகளின் அருகாமையிலே பாளையமடித்திருந்தபோது பிராஞ்சிய, ஜேர்மனிய சைனியங்கள் காய்ச்சலாலே படுமோசமாக வருந்தினவென்று ரசிற்றுஸ் என்பவர் எழுதிவைத்திருப்பது ஓர் உண்மையாகும். பிறெடெறிக் பார்பறோஸ்ஸாவின்சேனைகள் அத்துணை பயங்கரத்துக்குரிய வகையிலே மலேரியாவால் பாழாக்கப்பட்ட 1167-ம்ஆண்டின் ரோமாதுயுத்தமானது இந்தநோய்க்குத் தாயகம்போல் இருந்தது.

அபகீர்த்திபடைத்த பொண்ரின் சதுப்புநிலங்கள் நிரப்பப்பட்டதுமுதல் அத்தனை அநேகநாடுகளிற்போல இத்தாலியிலும் மலேரியா எவ்வளவோ அதிகம் குறைந்துவிட்டது. அத்துடன் முந்தியசர்வதேச சங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியானது 1938-ம் ஆண்டுவெளியிட்ட பாந்தஅறிக்கையிலே அத்துணை கணடிப்பாகச் சிபாரிசுபண்ணியுள்ள அதிகஞ்சிறந்த மருந்தாகிய குயினைனுக்கும் நன்றிபாராட்டவேண்டியதே. அந்தஅறிக்கையிலே மலேரியாக் காலமுழுவதும் தினமும் 6 கிறெய்ன் குயினைன் பாவித்துவருவது மலேரியா வராமற்தடுக்கும் அதிகஞ்சிறந்த மருந்தாகுமென்றும், ஓர்கால் மலேரியா காணுமிடத்து 5 முதல் 7 நாட்களுக்கு தினமும் 15 முதல் 20 கிறெய்ன் குயினைன் பாவித்துவருவது புத்தியாகுமென்றும் அந்தநிபுணர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

அவர்கள் விதித்துள்ள இந்தமுறைகளைக் கையாடிவருவதாலே, உலகமுழுவதும் தனது மகாகெடுதியான கொள்ளைநோய்களுள் ஒன்றிலிருந்து படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகிறது. குயினைனுக்கு நன்றிஉரித்தாகுக!

## மேற்றிராணியாண்டவரின் தரிசனை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்தவோர்பிரசங்கம் செய்யப்பட்டது. அதன்மேல் ஆண்டவரவர்களால் மாலைஆராதனை பாடப்பெற்றது. மறுநாட்காலை 7 மணிக்கு அவர் திவ்வியபூசைநிறைவேற்றிச் சிறுவர்சிறுமிகள் 22 பேருக்கு முதல்நன்மை வழங்கினர். பூசையின்பின் சுமார் நூறு பேருக்கு உறுதிபூசுதல் செய்தனர். மறுநாள் வண. கட்டளைக்குரவரால் எம்கோயிலுக்கெனத் தருவிக்கப்பட்ட

## சுதேசவர்த்தமானம்

### கல்லூரி ஆரம்பம்

ஆவணி விடுமுறைமுடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி புரட்டாசிமாதம் 4-ந் திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகும்.

### மணவீடு பிணவீடாயிற்று

இரத்தினபுரியிலே நேற்றுப் புதன்கிழமை நடைபெறவிருந்த ஓர் கல்யாணத்துக்கென்று மணவாளனும், அவர் தாயாரும், சகோதரனும், சகோதரியும் முதல்நாள் சாயந்தரம் கெந்தலையிலிருந்து ஓர் காரில் புறப்பட்டுச் சென்றபோது வத்தளையிலே அவர்கள் சென்றகார் ஓர் தந்திக்கம்பத்தில் மோதிவிபத்துக்குள்ளாகவே, மணமகனின் தாயார் ஸ்ரீமதி வி. கனகசூரியம் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். மணமகனும், அவர் சகோதரியான செல்வி சி. கனகசூரியமும், சகோதரரான திரு. ஜே. டி. கனகசூரியமும் காயமடைந்தனர். பிந்தியவர் கொழும்புப் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்

### மறியற்காரனின் துணிகரம்

மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த 22 வயசுடைய டார்லின் பீரிஸ் என்பவன் லில்லிநோனா என்ற 20 வயசுள்ள ஓர்பெண்ணைக் கொலைசெய்தானென்று குற்றஞ்சாட்டப்பெற்று விசாரணையின்போது குற்றவாளியாகி மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தான். ஆனால், இவன் அப்பீல்செய்து கொண்டதின்பேரில் ஐந்துநீதியரசர்கள்முன்பாகச் சென்றவியாழக்கிழமை அது விசாரணை செய்யப்படலாயிற்று. அன்று மத்தியானப்போசனத்திற்காகக் கோடுகலைந்து மறுபடிகூடுவதற்குச் சிலநிமிஷங்களின்முன் அவன் தனதுகொலைக் குற்ற விசாரணையின்போது தனக்கு மாறுகச் சாட்சிசொன்ன ஒருவன் ஆங்குநிற்கக்கண்டு அவனுக்குச் சரியானவிளாசல் கொடுத்துவிட்டான். பிந்த இவன் கோட்டுநிந்தை செய்தானென்ற குற்றச்சாட்டின்பேரிலே குற்றவாளியாகி அவ்விசாரணையின்போது சமுகங்கொடுக்கும் உரிமைநீக்கப்பெற்று உடனே தானே சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டான்.

### தாயும் மூன்று பிள்ளைகளும்

அம்பலாங்கொடையிலிருந்து பத்துமைல் தூரத்திலுள்ள யக்கற்றுவா எனும் கிராமத்திலே கர்ப்பவதியான போடியா றோசலின்எனும் ஸ்திரீயும், முறையே ஏழு, நான்கு, ஒன்றரை வயசுள்ள அவளுடைய மூன்றுபிள்ளைகளும் சென்றபுதன்கிழமை கொலை செய்யப்பட்ட சம்பவமானது அக்கிராமவாசிகளிடையே மிகுந்ததிகிலை உண்டுபண்ணுவதாயிற்று. பிள்ளைகள் கழுத்திலே குற்றப்பட்டிருந்தனராம். தாயிலே நான்கு குத்துக்காயங்கள் காணப்பட்டனவாம். சந்தேகத்தின்பேரிலே அவளுடைய மைத்துனர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். பிரேதங்களுக்குச் சமீபமாக ஓர் வில்லுக்கத்தியிருக்கப் பொலிஸ் கண்டெடுத்தனர். இந்தக்கொலைபாதகரைக் கண்டறிவதிலே பொலிஸ்நாய்கள் உதவிசெய்துவருகின்றன.

* * *

—அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த எட்டு ஆகாயவிமானந்தாங்கிக் சப்பல்கள் அணுக்குண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடிய விமானங்களைக் கொண்டுசெல்லத்தக்க வகையிலே திருத்தியமைக்கப்பட்டிருப்பதாகவும், அமைக்கப்பட்டுவருவதாகவும் வாஷிங்ரன்நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கின்றது. எசெக்ஸ் வகுப்பைச்சேர்ந்த 27,000 தொன் நிறையான வேறுமூன்று விமானந்தாங்கிக்கப்பல்களும்அதே விதமாகத் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன.

அழகிய சிலுவைப்பாதைப் படங்கள் ஆசீர்வதித்து ஸ்தாபிக்கப்பட்டன.

—திருப்பர்




## யேசுவின் நேசத்துக்காக அவனை மன்னிக்கிறேன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கதவைஅடைத்தார். அருகே போய் உட்கார்ந்தார். "அலெக்ஸான்ட்ரோ, கவனி. என் சகோதரர்ஒருவர் பொலிஸ்அதிகாரி. நீ ரொம்பப் பயப்படவேண்டியதில்லை. அதிகாரிகள் உன்னை மன்னித்துவிடலாம்என்று நம்பிக்கையிருக்கிறது. ஆனால, நீ எல்லாவற்றையும் சொல்லவேண்டும். இல்லாவிடில் எங்களால் ஒன்றுஞ்செய்ய இயலாது" என்று கூறினர். அலெஸ் மீண்டும் உயிர்பெற்றவனாகத் தோன்றினன். நடந்ததெல்லாம் சவிஸ்தாரமாய் உரைத்தான். அவன் அவளைக்குற்றியகத்தியைத் தன்னிடமே வைத்திருந்தபோதிலும் அவளை அவ்வளவு சடுதியில் கொல்லஎத்தனியாது நயவார்த்தையால் அவளை இணக்கமுயன்றும், அவள்உடன்பட மறுத்தபிறகே தான் கொன்றதாகக் கூறினன். அவள் தன் எண்ணத்துக்குக்கிஞ்சித்தும் இணங்கவில்லைஎன்பதை அழுத்தமாகஎடுத்துச்சொன்னன். பிந்தச் சுவாமியாருக்கும், அவளுக்குமிடையே நடப்பதென்ன? "என்குழந்தாய், யேசு சிலுவையில் எப்படி மரித்தார்? எப்படி மன்னித்தார்? என்பதை ஞாபகப்படுத்திக்கொள். நல்லகள்வனுக்கு "நீஇன்றுதானே என்னோடுகூடப் பரகதியில் இருப்பாய்" என்றாரே. நெருங்கிவந்தார் சுவாமியார். அவர் கண்கள் பேசின. "மரியா, நீ உன்னைக் கொன்றவனை உன்முழுஇருதயத்தோடு மன்னிக்கிறாயா?"

"ஆம், ஆம், நானும் யேசுவின் நேசத்துக்காக அவனைமன்னிக்கிறேன் ....மேலும் என்னோடுகூட அவனும் பரகதியில்இருக்க ஆசிக்கிறேன்." ஒரேமௌனம். சற்றுநேரம் கழித்து, "அவனை ஆண்டவரும் மன்னிப்பாராக. ஏனெனில் நான் ஏற்கனவே அவனை மன்னித்துவிட்டேன்." என்றது வீரத்தொனி.

—சீனதேசத்திலே மோட்டர்கார்கள் விலைமதித்தற்கரிய உடைமைகளாகக் கொள்ளப்படுகின்றன. அதனால் தனவந்தர்களான சீனர்களின் பிரேதஊர்வலங்கள் நடைபெறும்போது கடதாசிகொண்டுசெய்தமோட்டர்கார்களும் கொண்டுசெல்லப்படுகின்றன. அவ்வாறு செய்வதாலே இனத்தவர்கள் மறுவுலகிலும் கார்களைக் கொண்டிருப்பார்களாம்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 30 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org